உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ஹு மார்கழி மீ [பகுதி-உ.

## வேள்புலம்.

யான் "செந்தமிழில்" முன்பெழுதிய "வேளிர் வரலாறு" என்ற வியாசத்துள், சங்கநூல்களிலே வேளிர் எனப்படுவோர் இன் ஞரென்பது முதலிய வரலாறுகள் என்னறிவிற் கெட்டியவரை விளக்கப்பட்டன. அவ்வாராய்ச்சி தமிழறிஞர்பலர் கவனத்தைக் கவர்ந்ததுபோலவே, கொழும்பு ஸ்ரீமாந்-வி. ஜெ. தம்பிப்பிள்ளையவர் களாற், பல கீழ்க்குறிப்புக்களுடன் நன்கெழுதப்பட்ட அதன் ஆங் கில மொழிபெயர்ப்பை "ராயல் ஏஷியாடிக்" சங்கத்தாரும் (Royal Asiatic Society) ஏற்று, அவ்வியாசத்தைத் தங்கள் சங்கத்துச் சிலோன் பகுதிப்பத்திரிகையில் *வெளியிட்டுக்கொண்டார்கள்.

அவ்வாராய்ச்சியில், பழைய வேளிரென்போர் மகதநாடாண்ட ஆந்திரரும், அவர் வகையினராகிய சளுக்கரும் ஹொய்சள வேளா ளருமாவர் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் காட்டப்பட்டன. அவ்வேளிரது பூர்வதேசத்தைப்பற்றி, முன்பு அறியப்படாத செய் திகள் சில இப்போது தெரியவருவதால் அவற்றை ஈண்டுக் குறிப் பிடுவேன்.

வேளிர் கூட்டத்தவருள் ஒருவரான சளுக்கரைப், பழைய நிகண்டாகிய திவாகரமும், பிங்கலந்தையும் வேள்புலவரசர் என்று கூறுகின்றன. † இதனுல், அவர் புராதனநாடு, வேள்புலம் எனத்

* Journal, Royal Asiatic Society, (Ceylon) Vol. XXI. No. 61—1908. † "வேள்புல வரசர் சளுக்கு வேந்தர்"—திவாகரம்.

தமிழர் வழங்கியதொரு தேசமென்பது விளங்கும், இனி, இவ் வேள்புலம் யாதென ஆராய்வோம். சளுக்கவேளிர் முற்காலத்தில் பம்பாய் மாகாணமுழுமையும் ஆண்ட பேரரசர் என்பதும், அங்கிருந்தே அவர்கள் தென்னாட்டுக்குவந்தாட்சிபுரிந்தவரென்பதும் சரித்திரப் பிரசித்தமானவை. இவருள் பம்பாய்ப்பிரதேசத்திருந்தவர்களை மேலைச்சளுக்கரெனவும், சென்னைமாகாணத்தவரைக் கீழைச் 'சளுக்கரெனவும் சரித்திராசிரியர் வழங்குவர். மேலைச்சளுக்கருக்கு 'வடபுலத்து * வாதாவித் தொன்னகர'' மும், கல்யாணியும் தலைநகரங்களாம். இவை முறையே பம்பாய் நைநாம் இராஜ்யங்களில் உள்ளன. இவ்வாறு சளுக்கரசரது, பூர்வதேசம் பம்பாய்ப் பிரதேசமெனத் தெரியவருதலால், அவரது நாடாகக் கூறப்பட்ட "வேள் புலம்" என்பதும் அம்மாகாணத்தையே குறிப்பதாகல் வேண்டும் என்பது விளங்கும். வேளிரது ஆதிநாடு பம்பாய் மாகாணத்துத் துவாரகையென்பது "உவராவீகைத் துவரையாண்டு, நாற்பத்தொன் பது வழிமுறை வந்த, வேளிருள் வேளே'' என இருங்கோவேளைக் கபிலர் பாடியதனாலும் அறிக. (புறம் - உ0க.)

முற்காலத்தில், தமிழ்மக்கள் பம்பாய்மாகாணத்தையே வேள் புலமென அழைத்துவந்தனரென்பதற்கு, அங்குள்ள நகரங்கள்பல வேள் என்ற சொல்லடியாக வழங்கிவருதல் சிறந்தசான்றாகின்றது.

நிஜாம் ராஜ்யத்தைச்சார்ந்து அதன் வடமேற்கெல்லைப்பக்கத் துள்ளதும், அரங்கபாத் தாலூகாவைச் சார்ந்ததும், பம்பாயின் வட பாகத்தையொட்டியுள்ளதுமான எள்ளூரா (Elloora) என்ற பிரபல மான குறிஞ்சிநிலத்தூர் ஒன்று உண்டு. அவ்வூரை வேருள், எருள் என ஜனங்கள் சிதைத்து வழங்குவர். அது ஏலாபுரம் என்னும் வடமொழியின் திரிபென்பர் டாக்டர் பண்டாரகர். இதனை ஆக்ஷேபித்து, டாக்டர் பிளீட் துரையவர்கள்(Dr. Fleet) அவ்வூர் வேளூர் வேளூரகம் எனப் பழையசாஸனங்களிற் கூறப்படுதலைத் தக்க காரணங்களோடு காட்டி விளக்கியிருக்கின்றனர்.†

---

* Badami.

† Bombay Gezetteer, Vol. I. Part II., page 391.

இவ்வாறே, பம்பாய் மாகாணத்து, ஷோலாபூர் (Sholapur) ஜில்லாவிலுள்ள ஒருநகரம் வேளாபுரம் (Velapur) என்ற பெயர் கொண்டுளது. இன்னும், வேளிரின் ஆதியிருப்பாகிய பம்பாய்க்கு வடபாலில், கத்தியவார் (Kathiavar) கச்சு (Cutch) பிரதேசங்களில் பேலா (Bela) என்னும் பெயர்வாய்ந்த ஊர்கள் பலவுள. * அவ்வாறே அங்குள்ள அஹமெட்நகர்த் தாலூகாவில் (Ahemednagar) வேளாபுரம் (Velapur) எனவும், பூனாஜில்லாவில் வேளகம் (Belha)‡ எனவும் நகரங்கள் காணப்படுகின்றன. இனி, அம்மாகாணத்தின் தென்பாகத்திலுள்ள முக்கியமான ஒருஜில்லாவும் நகரமும் பேல்காம் (Belgaum) எனப் பெயர்பெறுதலைப் பலரும் அறிவர். பேல்காம் என்ற நகரம் வேள்கிராமம், என அப்பக்கத்துச் சாஸனங்கள் பலவற்றில் உள்ளதெனவும், அது † வேள்வலம் வேணுகிராமம் வேணுபுரம் எனவும் வழங்குவதுண்டென்றும், சாளுக்கியரின்சகோதர வகுப்பினராகிய கடம்பர்க்கு அது முக்கியநகரமாய் விளங்கியதெனவும் சரித்திராசிரியர் கூறுவர். அப்பக்கத்து லக்ஷ்மேசுவரத்தையடுத்துள்ள ஓரூர் வேள்பட்டி (Belhutti) ‡ என்ற பெயர்வாய்ந்துளது.

இங்ஙனமே பம்பாய் மாகாணத்தை ஊன்றிநோக்குமிடத்து, ஆங்குள்ள நகரங்கள் பல வேளென்ற சொல்லடியாக வழங்குதலை நன்றாகக்காணலாம். பிற்காலத்தில் பம்பாய் மாகாணத்தினின்று மைசூர்ப்பிரதேசத்தை யடைந்த பேளாளர் என்ற வேளிர்கள் ஆண்ட நகரங்களும் பேளூர் பேளாபுரம் எனப்பெயர்வாய்ந்து கன்னட நாட்டில் உள்ளன.

இவற்றால், வேளிர்க்குரிய நாடானமைபற்றிப் பம்பாய்மாகாணம் "வேள்புலம்" எனத் தமிழ்ப்பெயர் வாய்ந்தமை பெறப்பட்டது. "வேள்" என்ற தமிழ்ப்பெயர் முருகக்கடவுள், மன்மதன், சளுக்கரசர்—இவர்கட்கு முன்னாள் முதலே வழங்குவதென்பது,

---

* See Indian Postal Guide.

† Bombay gezetteer Vol. I. Part II. Page 305.

‡ வகாரம் பகரமாகவும், பகரம் ஹகாரமாகவும் பாஷாந்தரத்தில் வழங்கும்.

"தாரகாரியுஞ் சளுக்கியர் வேந்தனும், வேனி லாளனும் வேளென லாகும்" என்னும் பிங்கலந்தையால் அறியலாம். அன்றியும் தமிழ் நாட்டைச் சூழ்ந்துள்ளனவாகச்சொல்லப்படும் கொடுந்தமிழ் நிலங்களில் ஒன்றான வேணாடு என்பது வேள்புலமாகிய பம்பாய் மாகாணத்தையே குறிப்பதாகல்வேண்டும். இவ்வாறே கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றும், பம்பாய் மாகாணத்தைச்சேர்ந்ததுமான கொங்கணம் தமிழரசாட்சிக்குட்பட்டிருந்ததென்பது புறநானூற்றில் கொண்கானங்கிழானைப்பற்றியபாட்டால் * அறியக் கிடத்தலின், அக்கொங்கணத்துக்கு வடபாலதாகிய வேள்புலமும் முன்பு தமிழ்வழங்கிய நாடாகவிருந்ததெனக் கருதுதலே பொருந்தும். பஞ்சதிராவிடம் என்பதில் மகாராஷ்டிர தேசமும் அடங்குதல் இக்கொள்கையை வற்புறுத்துதல் காண்க. தமிழ்மக்கள் பம்பாய்மாகாணத்தை "வேள்புலம்" "வேணாடு" என அழைக்க, ஆரியமக்கள் அதனைத் "தண்டகாரணிய தேசம்" என வழங்குவாராயினர். இதனை மகாராஷ்டிர தேசத்து பிராமணர் விசேடகாலங்களிற் செய்துகொள்ளும் சங்கற்பக் கட்டுரைகளிலே, "மகாராஷ்டிரதேசே" என்னாது "தண்டகாரண்ய தேசே" † என வழங்குதலாலறிக. பதிற்றுப்பத்திற் சேரனொருவன் செய்திகூறுமிடத்தில்வரும் "தண்டாரணியத்துக் கோட்பட்டவருடையைத்—தொண்டியுட்டந்து கொடுப்பித்து" என்ற அடிகளினுரையில், "தண்டாரணியம்—ஆரிய நாட்டிலுள்ளதோர் நாடு" என எழுதப்படுதலால், தண்டாரணிய நாடு என்னும் ஆரிய மக்கள்வழக்குப் பழையதமிழ்நூலிலும் பயிறல் காண்க.

பத்திராசிரியர்.

---

* புறநானூறு. பாட்டு, கருசு.

† Dr. Bhandarkar's History of Dekken. pp. 136.

சிவமயம்.

# தமிழ்ச்சொற் பிரயோகவிவேகம்.

தமிழிலே வழங்குஞ் சில சொற்களினது பொருளாற்றலையும் அச்சொற்கள் அமைக்கப்பட்ட இயல்பையும் காரணத்தையும் உற்று நோக்கும்போது அவற்றை அமைத்தபுலவர்களது விவேகமும் சாதுரியமும் உலகியலுணர்ச்சியும் எத்துணைச்சிறப்புடையனவென்பது நன்கு புலப்படும். ஒரு சித்திரகாரனுடைய சாதுரியமும் விவேகமும் நுண்ணிய அவதானமும் மனோதருமமும அவன்தீட்டிய சித்திரத்தை நோக்குந்தோறும் புலனாவதுபோல ஆன்றோரது அறிவாற்றலும் சாதுரியமும் மனோதருமமும் கூர்ந்த உலகியல் அவதானமும் அவர்களுடைய சொற்பிரயோகங்களை நோக்குந்தோறும் புலப்படும்.

எப்பொருளையும் ஊன்றிநோக்குவோர்க்கே அதன் அமைப்பியல்பு நன்குபுலனாகி அதிசயம் விளைப்பதாம். அங்ஙனம்நோக்குமியல்பில்லார்க்கு அதுசாமானியமாய் அதிசயம் விளைப்பதாகாது. அதனால்விளையும் இன்பத்தையும் அவர் அறியார். உலகத்திலே விவேகிகளென யாவராலும் பாராட்டி உச்சிமேற்கொள்ளப்படுவார் உலகியல் முறையை ஊன்றிநோக்கி அவதானஞ்செய்த அநுபவசாலிகளேயாவர். அவர்களே ஏனோர்க்கெல்லாம் அறிவுச்சுடர்காட்டும் தீபமாகவுள்ளவர். அவர்களே ஏனோர்காணாது விடுத்த அரும்பொருளெல்லாமெடுத்துக் காட்டி அவைகளுக்குக் குறியீடுசெய்பவர்கள். அக்குறியீடுகளே அரும்பெருஞ்சொற்களாக வழங்குவனவாம்.

அறியாதபொருளைக் கண்டவிடத்துப் பெயர்வினாவுவதும் அறியாத சொல்லைக்கேட்டவிடத்துப் பொருளை ஆராய்வதும் மக்கள் இயல்பாம். பெயர்கேட்டவிடத்தும் பொருள்கண்டவிடத்தும் உளதாம் இன்பம் பெரும்புதையல் கண்டான இன்பத்தினும் பெரிதாம்.

காட்சிப்பொருள் கருத்துப்பொருளெனப்படும் இருவகைப் பொருள்களுள்ளே கருத்துப்பொருட்காட்சியே அரியதுஞ்சிறந்தது

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

மாம். அதனைவகுத்தலும் குறியீடுசெய்து வழங்கலும் மிக்க அருமையும் பெருமையுமுடையனவாம். இவ்வாறு ஆன்றோர் தாங்கண்ட கருத்துப்பொருளுக்குக் குறியீடாகவழங்கிய சொற்களினது திறத்தையும் வனப்பையும் சிலவுதாரணங்களால் விளக்குதும்.

துன்பத்துக்குப் பரியாயமாகவுள்ள பெயர்களுள்ளே, அலக்கண், இடுக்கண், புன்கண், பழங்கண், உறுகண் என்பன ஒரீற்றுச் சொற்கள். இவையைந்தும் துன்பத்தின் காரியமாகக் கண்களிலே நிகழும் நிகழ்ச்சியை விளக்குஞ்சொற்களாகிப் பின் அந்நிகழ்ச்சிக்குக் காரணமாகிய துன்பத்துக்குப் பெயராயின. துன்பம் வந்தவிடத்துக் கண்ணினது இயல்புபலவாறாகத்திரியும். அவ்வியல்புகளுள்ளே ஒன்று சுழற்சி. அதுவன்றிக்கண்ணில் நீருந்ததும்பும். அலம் என்பதுசுழற்சிக்கும் நீருக்கும் பெயராதலின் அலக்கண் என்பதற்குச் சுழற்சியையுடைய கண் நீர்ததும்புங்கண் எனப் பொருள் விரிக்கப்படும். துன்பம் வந்தவிடத்துக்கண்கள் ஒடுங்கி விகாரப்பாட்டினையடையும்; அச்செய்தி இடுக்கண் எனப்பட்டு அதன் காரணமாகிய துன்பமும் அப்பெயர் கொள்வதாயிற்று. இடுக்கற்கண் இடுக்கண்என மருவுவதாயிற்று. இடுக்கல் ஒடுக்கல். * புன்கண்என்பது துன்பம்வந்தவிடத்துளதாம் ஒளியிழந்துகண்சிறுத்தலாகிய விகாரப்பாட்டினை யுணர்த்துஞ்சொல்லாய்ப்பின்னர் அதன் காரணமாகிய துன்பத்துக்குப் பெயராயிற்று. பழங்கண் என்பது துன்பம்வந்துற்றவிடத்துத்தன்பிரகாசமும் மலர்ச்சியுமிழந்து தளர்வினையடையுங்கண்ணினது இயல்பைக் குறித்தலிற் றுன்பத்துக்குப்பெயராயிற்று. பழமை இங்கே தளர்வு. உறுகண் என்பது துன்பத்தால் நலிந்து கண்கள் விழித்தொன்றையு நோக்காது மடல்கள் ஒன்றோடொன்று பொருந்தப்பெற்றனவாய் நிற்குமியல்பினையுணர்த்துஞ் சொல்லாம். அஃது அவ்வியல்புக்குக் காரணமாகிய துன்பத்துக்குப்பெயராயிற்று.

இன்னும் இவ்வீற்றுச்சொற்கள் தறுகண் வன்கண் எனச்சிலவுள. தறுகண்என்பது புறம்பெயரவொட்டாது நிறுத்தியகண். தறுதல் தடைப்படல். பகைவர்மேற்சென்றகண்ணைப்புறத்தேஓடவிடாது அவர்மீதே நிறுவுதல் வீரர் இயல்பாதலின் தறுகண் என்பது வீரத்

* திருக்குறள், 1222-உரை.

துக்காயிற்று. *வன்கண் என்பது அருணேக்கி மருணேக்கி அசை யாதகண். அதுவும் சினம்வீரம் அருளின்மை முதலியகாரணம் பற் றிக் கண்ணினிடத்தேநிகழுஞ் செய்தியாதலிற் கொடுமை வீரமுதலி யவைகளுக்குப் பெயராயிற்று.

இவ்வாறே தமிழிலுள்ள சிலசொற்களின் ஆக்கக்காரணத்தை ஊன்றி ஆராயுமிடத்து அவற்றினது அருமையும் நுண்மையும்பொ ருட்டுணிவும் நன்குபுலப்பட்டு அவற்றைப் பொருட்சுவைதோன்றப் பிரயோகிக்குமிடமும் முறையும் ஐயந்திரிபறத்தெளிந்து துணியப் படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

# சோதிட கணிதம்.

## பாயிரம்.

இந்நாளில் சோதிடசாத்திரத்தை ஆங்கிலம்படித்த வகுப்பார் அவ்வளவாக நம்புவதில்லை. அவர்கள் இது பொய்யென்றும் சிலர் கட்டுப்பாட்டினுல் ஏற்பட்டதென்றும் தமக்குத்தோற்றியவாறு பே சுகின்றனர். அதற்குற்றகாரணங்கள் யாவெனயோசித்தனரோ? இல்லை. மகாவித்துவாணுகிய வராகமீஹிரரது பிரகத்ஜாதகம்என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த காலஞ்சென்ற ஸ்ரீமத்-ந. சிதம் பரையரவர்கள் அதன்முகவுரையில்“நகைப்புக்கு இடமாக்குவதைத் தவிர்த்து அதைப்பற்றி ஒருகணமேனும் யோசிப்பதில்லை. இந்தவிஷ யத்தை எப்படி ருசுப்படுத்துகின்றீர்கள்; அதை எப்படி ருசுப்படுத் துகின்றீர்கள் என்றுகேட்டால், அவர்களது சாதாரணபுத்தி சொல் லும் என்கின்றனர். இச்சாதாரணபுத்தி என்பது ஒருவிஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்யச்செய்ய அதைப்பற்றிய அபிப்பிராயம் மாறு மென்பதை அறிவதில்லை. அன்றியும் ஒருகாலத்திய அறிவு மற்ரெரு காலத்திற் பேதப்படுகின்றதென்பதையும், ஒரு ஜாதியாரின்நோக்கம்

* திருக்குறள், 632-உரை.

மற்றொரு ஜாதியாரின் நோக்கத்திற்கு விரோதமாயிருக்கின்றதென்பதையுங்கவனிப்பதில்லை. எங்கு சரியானசாக்ஷியம் கிடைக்கின்றதோ அதனைப்பற்றி ஆராய்ச்சிசெய்யவேண்டியதவசியம். இன்ன ஜோசியர் இன்னமாதிரிசொன்னர். அது தவறிவிட்டது; ஆகையால் சோதிடம் என்பது ஒரு சாத்திரம் என்று சொல்லுதல்தகாது. சோதிடம்வல்லார் அறிந்தவராக இருக்கலாம்; ஆனல் அநேக வழுக்கள் காலதேசத்தால் உண்டாயிருக்கலாம் என்று கொள்ளவேண்டும்.

இச்சாத்திரத்திற்கு மற்றொரு மறுப்பாவது, இவ்வுலகத்தின் வடகோடியிலும் தென்கோடியிலும் ஒரு ரேகையிற்பிறந்த இருவருடைய லசனபாவங்கள் ஒன்ருகத்தானே இருக்கவேண்டும். அப்படி இல்லை, இராமலிருப்பதற்குக்காரணம் என்ன என்கின்றனர். சாத்திரத்தின் மூலத்தார் விதிகளை அறியாமையால் இப்படிச்சொல்லுகின்றனர். கிரகரீதிகள் ஒன்ருக இருக்கலாம். கிரகத்தைமாத்திரம் கொண்டு ஜாதகனுடைய பாவங்களைச்சொல்லுவதில்லை. ஜனனகாலமாகிய லக்னந்தான் இதினின்றும் எக்காரியத்தையும் நடத்துவது, ஆகையால் வடபாகத்திலுள்ளவனுக்கும், தென்பாகத்திலுள்ளவனுக்கும் அப்பாகத்தில் காலம்மாறுவதால் எல்லாம் மாறிவிடும். இங்கே சிம்மத்தில் 20-பாகம் ஏற்பட்டிருக்குமாயின் அந்த இடத்தில் கும்பத்தில் இருபதுபாகமாயிருக்கும். அப்பொழுது எவ்வளவு வித்தியாசமேற்பட்டுவிடும். அக்ஷாம்ச வித்தியாசத்தால் (Longitude) காலம் மாறுகின்றது. அல்லது ஒரே அக்ஷாம்சரேகையில் பிறந்தாலும் உத்தராம்ச ரேகையால் மாறுதலுண்டாகின்றது. இப்போது லக்னம்என்பது என்ன? அதுமத்தியரேகையிற்சேரும் பாகம். அப்பொழுது ஒருசமரேகையிலிருந்தபோதிலும் மத்தியரேகைக்குப் போய்சேருங்காலத்து வித்தியாசமேற்படுமன்ருே; ஆகையால் அக்ஷாம்சத்தாலாவது, உத்திராம்சத்தாலாவது காலவித்தியாசம் ஏற்பட்டு, லக்கினப்பிறழ்ச்சி உண்டாகி அதன்மூலமாய்ப் பலன்கள் வித்தியாசப்படுகின்றதென்பது அநேகருக்கு புதுமையாகவிருக்கும் என்று எழுதிக்கொண்டுபோய் ஜாதகம கணிப்பித்தற்கு இக்காலத்தியபஞ்சாங்கத்தில் அநேகவழுக்களிருக்கின்றனவென்றும், எழுதியிருக்கின்ருர். சோதிடத்திற்கு வானசாத்திரமும் அதன்மேல் கணிதமும் அவ

சியம். இப்பொழுது கும்பகோணத்து மடத்திலும், சென்னைரெகுநாதாசாரியாராலும் கணிக்கப்படும்பஞ்சாங்கங்கள் சரியானபடி வானசாத்திரத்தின்பேரில் கணிக்கப்படுகின்றனவாகும், ஆயினும் அவைகள் மேல்நாட்டு வானசாஸ்திரத்தினால் கணிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு மேஷோச்சம் சரியான இடத்தில்இருக்க இந்துக்களுக்கு மேஷராசி ரேவதிநக்ஷத்திரத்திலிருக்கிறது. இப்பொழுது ரேவதிநக்ஷத்திரமே தோன்றவில்லை. அன்றியும் இவ்வான்மீன் சரியான இடத்திற்கு (Vernal Equinox) 20-பாகைதள்ளி நிற்கிறது. இதினின்றும் கணிக்கப்படுபவைகளுக்கு நாராயணஸ்புடம் என்றும் சரியான இடத்தினின்றும் கணிக்கப்படுபவைகளுக்கு சாயனஸ்புடம் என்றும்பெயர். இதன்வித்தியாசத்திற்கு அயநாம்சம் என்றுபெயர். ஆயினும் இந்த அயனாம்சம் சரிவரத்தெரியவில்லை. வானத்தைப்பார்த்தும் தெரிந்துகொள்ளக்கூடவில்லை. 1883-ம் வருடம் ஜனவரிமீ முதற்றேதியில் அவரவர்கள்கொண்ட அயனாம்சம் என்னவெனில்,

| | பாகை. | கலை. | விகலை. |
|---|---|---|---|
| சென்னை கும்பகோணம். | 22 | 2 | 39 |
| வாக்யம் | 22 | 41 | 44 |
| சித்தாந்தம். | 20 | 46 | 15 |

சிதம்பரையரவர்கள் கண்டது $20^{\circ}\ 23'\ 8''$-க்கும் $20^{\circ}\ 25'\ 22''$-க்கும் இடையிலுள்ளதாகவிருந்தது. இதன் மத்திபம் 20-பாகை 24-கலை 15-விகலை. இந்த சரியான அயநாம்சத்திற்கும் அவரவர்கள்கொண்ட அயநாம்சத்திற்குமுள்ள வித்தியாசம்.

| | | பாகை. | கலை. | விகலை. |
|---|---|---|---|---|
| சென்னை கும்பகோணம். | + | 1 | 38 | 24 |
| வாக்யம். | + | 2 | 17 | 29 |
| சித்தாந்தம். | + | 0 | 22 | 00 |

இதனாலுண்டாகக்கூடிய கிரக வித்தியாசங்களாவன:—

பிந்தி.

| | நாள். | மணி. |
|---|---|---|
| சூரியன் | 1 | 16 |
| சந்திரன் | 0 | 3 |
| செவ்வாய் | 3 | 3 |
| புதன் | 0 | 10 |
| குரு | 19 | 17 |
| சுக்கிரன் | 1 | 0 |
| சநி | 48 | 23 |
| இராகு கேதுக்கள் | 31 | 0 |

இதனால் பஞ்சாங்கங்களில் காண்கிறபடி கணித்த ஜாதகங்கள் வித்தியாசப்படத் தடையென்னை?

அன்றியும் இன்னொரு பெருத்ததவறுயாதெனில், எல்லோரும் எல்லாவிடத்திற்கும் இராசிமானநாழிகைகளை மேஷம் $4\frac{1}{4}$ (சவ) ரிஷபம் (சஹ) $\frac{3}{4}$-என்ற பழையபாடத்தையே உபயோகிக்கின்றனர். இது தேச அக்ஷாம்சத்திற்கேற்றபடி ஏற்பட்டிருக்கின்றது. இவைகளைத் தீர்த்து லக்னத்தை நிர்ணயித்துக்கொண்டு மற்றவைகளைக்கணித்துக்கொண்டு ஜாதகபலம் பார்க்க ஏற்பட்டால் தவற வழியேயில்லை.

இக்கணிதம் சிலரிடமே இருப்பதால் அவர்கள் வெளியிடுவது மகா கஷ்டம். ஆயினும் எமக்கு கிடைத்தபடி இப்போது செந்தமிழ் வாயிலாக வெளிபிடத்துணிந்தது யாதுகாரணத்தாலெனின் தெரிந்தபெரியோர்கள் குற்றம் குறைகளிருப்பின் அவைகளைத் திருத்துவித்து உலகோபகாரமாகச்செய்விப்பார்களென்றெண்ணியே எழுதத் துணிந்தேன். பெரியோர்கள் மன்னிப்பார்களாக.

இலக்கணவிளக்க பரம்பரை,
சோமசுந்தரதேசிகன்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

## ரு-வது சதுர்த்காரிகாலம்பகம் உ-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அதற்கவர் ஹேவத்ஸா! யானிந்த ஆச்சிரமஸ்தானத்திற்குவந்து எண்ணூறுவருஷங்களாயின. ஆகியுமிதுவரைக் கனகபுரியென்னும் நகரமொன்றிருப்பதாகக் கேள்விப்பட்டதுமில்லையேயென்றம்முனிவர் சொல்லலுமவன் மிகவருத்தத்துடன் கூடியவனாக அம்முனிவரை நோக்கி ஸ்வாமீ! அந்நகரமொன்றுண்டென்பது, தங்களாலுமிது வரை கேள்விப்பட்டதில்லையென்றால் அதனைக்காணவேண்டுமென்று கருதிப் பூமியைச் சுற்றித்திரிகின்ற யானிவ்விடத்தி லுயிரிழந்தவனாயினேன் என்று மறுபடியும் கூறினன்.

பின்பு அம்முனிவரதனைக்கேட்டதும் முறையே சற்றுநேரமாலோசித்தறிந்து வத்ஸா, என்னிடத்திலுனக்கு நம்பிக்கையிருக்குமாயின் நான் சொல்வதைச்செய் இங்கிருந்து நூறுயோஜனைதூரத்தில் காம்பில்யதேசமென்றொரு தேசமிருக்கின்றது. அத்தேசத்தில் மூன்றுபர்வதங்களிருக்கின்றன. அவற்றுள் உத்தரமென்கின்றபெயரினையுடையதொரு மலையிருக்கின்றது. அதிலுமோர் ஆச்சிரமமிருக்கின்றது. அந்த ஆச்சிரமத்தில் எனது மேன்மைதங்கிய ஜ்யேஷ்டப்ராதாவான தீர்க்கதபஸென்பவரொருவரிருக்கின்றார். அவரிடஞ்செல்வாயாகில் அவர் மிகவும் முதியவராக விருத்தலாலொருவேளை யந்நகரத்தை யறிந்திருக்கலாமென்றனர். இவ்விதஞ்சொல்லியதைக்கேட்டதும் சக்திதேவனென்பவன் ஸ்வாமீ, தங்களுத்திரவின்படியே செய்கிறேனென்றுசொல்லி ஒருபுகலுமில்லாதிருந்த தனக்கோரவலம்பங்கிடைத்ததென்ற வெண்ணத்துடனன்றிரவை யவ்விடத்திற்கழித்துவிட்டு மறுநாட்காலையி லங்கிருந்துபிரயாணமாகிப் பற்பலவனாந்தரங்களைக்கடந்து பலநாட்கழித்தபின் காம்பில்யதேசத்தை யடைந்து அங்கிருக்கின்ற உத்திரகிரியைச்சார்ந்து அம்மலையின்மீதேறி அவ்விடத்திலிருக்கின்ற ஆசிரமத்தில் வசிக்கும் தீர்க்கதபசென்னும் முனிவ

ரைக்கண்டு வணங்கி மகிழ்வுற்றவனாக அம்முனிவர்செய்தவிருந்துப சாரத்தைப் பெற்றுக்கொண்டு அவரருகிலிருந்தனன்.

அப்போது அவர் குழந்தாய், நீயெங்கிருந்துவருகின்றாய்; இவ்விடம் வந்த காரணமென்னவென்று கேட்க அவனம்முனிவரைப்பார்த்து அறுகுணங்களும் நிறைந்ததபோநிதியே யான் வர்த்தமானபுரத்தினின்றும் வருகின்றேன். அவ்வூரரசனதுபுதல்வி, கனகபுரியென்னும் நகரத்தைப்பார்த்து வந்தவனைத்தான் விவாஹஞ்செய்துகொள்வதென்றுப்ரதிஞ்ஞைசெய்திருக்கின்றாள். நான் அந்தராஜகுமாரியையடைவதற்காகக் கனகபுரியைப்பார்த்து வரவேண்டுமென்ற வெண்ணத்துடன் புறப்பட்டேன். ஆனால் அந்நகரமெவ்விடத்தி லிருக்கின்றதோ யாதொன்றுமறிந்திலேன். யானோ அவ்விடம்போய் வரவேண்டியதும் அவசியமாகவே யிருக்கின்றது. இதனைப்பற்றிச் சூர்யதபசென்னு மகரிஷியிடம் வந்துதெரிவித்துக்கொண்டதில் அவர்தான் இதுவரை யந்நகரத்தின் பெயரைக் கேட்டதேயில்லை யென்றும் என்னைத்தங்களிடம் போகும்படியு முத்திரவுகொடுத்தனுப்பினார். ஆதலாலிவ்விடம்வந்தேனென்று தெரிவித்தனன்.

இவ்வாறு சக்திதேவன் சொல்லியதைக்கேட்ட அம்முனிவர் அவனைப்பார்த்துப் புத்திரா, எனக்கிவ்வளவுவயதாகியு மிப்போதுதான் கனகபுரியென்னுமொரு நகரமிருப்பதாகக்கேட்டேன். ஆனால் எனக்கு தேசாந்திரங்களினின்றும் வருகின்ற வவ்வெவர்களோடும் பழக்கம் கிடையாது. ஆதலாலந்நகரத்தைப்பற்றி யானிதற்குமுன் கேட்டிருப்பதேயில்லை. அதனைக்காணுதலோ தூரத்திலென்றே நினைக்கின்றேன். அன்றியும் அந்நகரமானது நிச்சயமாய் வெகுதூரமாயிருக்கின்ற வொருத்வீபாந்தரத்திலிருத்தல்வேண்டும். வத்ஸா, அதனைக்காண்கின்ற விஷயத்திலுனக்கோருபாயம்சொல்கின்றேன் கேள். சமுத்திரத்தின் மத்தியத்தில் உத்தலமென்னும் பெயரினையுடையதொருத்வீபமிருக்கின்றது. அதில் மிகுந்தசெல்வத்தையுடையவனும் நிஷாதஜாதியர்கட் கதிபதியுமான சத்யவ்ரதனென்றபெயரையுடையவொருவனிருக்கின்றனன்.

அவனுக்கு த்வீபாந்திரங்க ளெல்லாவற்றிலும் போக்குவரத்துண்டு. அவனொருவனே யந்நகரத்தைப் பார்த்திருக்கலாம்.

அல்லது கேட்டாவதிருப்பான். ஆதலாலிப்போது முதலில் சமுத்திரத்தின் சமீபத்திலிருக்கின்ற விடங்கபுரமென்னும் நகரத்திற்குப் போகவேண்டும். அந்நகரத்தினின்றும், யாரேனுமொரு வணிகனைப் பற்றிக்கொண்டு கப்பல் மார்க்கமாய் நிஷாதபதியான சத்யவ்ரதனிருக்குமிடம் போய்ச்சேர்ந்தா லிஷ்டசித்தியைப்பெறலாமென் றம் முனிவர் சொல்லவும், அந்த சக்திதேவ னந்தக்ஷணமே யப்படியே செய்கிறேனென்றுசொல்லி, முனிவரைப் புகழ்ந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு அந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறி அநேக யோஜனை தூரங்களையும்,பற்பலதேசங்களையுங் கடந்துசென்று சமுத்திரத்தின் கரைக்கோர் திலகம்போல் விளங்கும் விடங்கபுரமென்ற நகரத்தையடைந்து அவ்வூரில் சமுத்திரதத்தனென்னும், வணிகன் உத்தலத்வீபத்திற்குப் போகிறானென்பதை விசாரித்து அவனிடஞ் சென்று சக்திதேவ னவ்வணிகனைச் சிநேகஞ்செய்துகொண்டான்.

பின்பு அவ்வணிகன்புறப்படும்போது சக்திதேவன் தானும் கூடவருவதாகச்சொல்ல அவனும் சம்மதித்து தங்களிருவர்க்கும் வழிக்குவேண்டு முணவுபதார்த்தங்களை நிரம்பவெடுத்துக்கொள்ள இருவரும் கப்பலின்மீதேறிக் கடல்மார்க்கமாய்ப்பிரயாணமானார்கள்.

பின்னர் அக்கப்பலானது நெடுந்தூரங்கடந்து அந்தஉத்தலத்வீபத்தையடைவதற்குச் சொற்ப தூரத்திற் செல்லுங்கால் மின்னற்கொடியாகிய நாவுடன்கூடிமுழங்குகின்ற கரியமேகமாகிய இராக்கதவடிவம் ஆகாயத்திற் கிளம்பிற்று. அச்சமயத்தில், இலேசான பொருள்களை உயரவெடுத்தெறிகின்றதும், கனத்தபொருள்களைக் கீழேகொண்டமிழ்த்துகின்றதுமாகிய * ப்ரசண்டமாருதமும் விதியின்ஆரம்பம்போல வீசிற்று. அத்தகைய பெருங்காற்றினலடிபட்ட அலைகள், சிறகுடன் கூடியமலைகள் தங்களிருப்பிடமாகிய சாகரத்தையவமதிக்கின்ற காற்றின்மீதுள்ளகோபத்தினாற் கடலினின்றுமெழுந்தனபோலெழுந்தன. எழுதலும், அம்மரக்கலமானது க்ஷணநேர மாகாயத்திற் செல்கின்றதும், க்ஷணநேரம் கீழேவருகின்றதுமாய்த் தனவான்களுடைய உயர்வுதாழ்வுகளின் மாறிமாறி வருந்தன்மையைக் காண்பிக்கின்றதுபோலிருந்தது.

* ப்ரசண்டமாருதம் - பெருங்காற்று. விதி - ஊழ்.

*

அந்த க்ஷணத்தில் வணிகர்கள் அலறியழுகின்ற வோசைகளால் மிகவும் நிறைந்துள்ள அக்கப்பலானது அவ்வோசையின்மிகுதியை ப்பொறுததுபோல வுயரக்கிளம்பிவீழ்ந்து பார்தாக்கியுடைபட்டது. அதிலிருந்த வணிகர்பலரும் நீரில்மூழ்கிமாய்ந்தனர். அப்பொழுது அம்மரக்கலத்துக்கதிபதியான சமுத்திரதத்தனென்பவன், உடைந்து கிடந்தவொரு பலகையின்மீதேறி யுயிரோடு தெய்வகதியால்வந்த மற்றோர்கப்பலிலேறிக் கரைசேர்ந்தனன். அவருள் சக்திதேவ னென்பவன் சமுத்திரத்தில்வீழ்ந்து பரிதபிக்குங்கால், ஒரு பெரிய

மீன்வந்து குகைபோன்ற தன்வாயைத்திறந்து அவனை அவயவங்க ளிலொன்றையுங் குறைபடுத்தாது அப்படியே விழுங்கிற்று.

விழுங்கினவுடன், தன்னிஷ்டப்படி கடல்நடுவிற்சஞ்சரிக்கின்ற அம்மச்சமானது ஊழின்புணர்ப்பினு லுத்தலத்வீபத்தின் சமீபத்தை யடைந்தது. அவ்விடத்திற் செம்படவர்தலைவனுகிய அந்தச்சத்ய வ்ரதனுடைய வேலைக்காரர்கள்வந்து வலையைவீச அம்மீன் விதிவசத் தினுலவ்வலையிலகப்பட்டது. அவர்களும் மிகப் பெரியசரீரத்தை யுடையவதனையிழுத்துக்கொண்டு சந்தோஷத்துடனப்போதே தன் னெஜமானரிடம் செல்ல, அந்த சத்யவ்ரதனும் அத்தகையமீனைக் கண்டு தானும் மிகமகிழ்வுடன் தன்வேலைக்காரர்களா லதனைக்கீறும் படிசெய்ய அதன்வயிற்றினின்றும் ஜீவனுடன் சக்திதேவனென் பவன் மற்றுமோராச்சர்யமானகர்ப்பவாசத்தையனுபவித்தவனுக வெளியேறினன்.

அவன் வெளிவரும்போதே அங்கிருக்கின்றவர்களை யாசிர்வதி த்துக்கொண்டுவரவும் காளைப்பருவத்திலிருக்கின்ற அவனைப்பார்த்து ஆச்சரியத்துடன் கூடிய சத்யவ்ரதன், ஓ பிராமணரே, நீர் யார்? யாதுகாரணத்தினு லெவ்வண்ணமாகவிம்மச்சத்தின்வயிற்றிலிருக் கும்படி யுமக்குநேர்ந்தது. உமது விருத்தாந்தமென்ன, மிகவுமத்பு தமாகவிருக்கின்றதென்றனன்.

அதைக்கேட்டுச் சக்திதேவன் செம்படவர்தலைவனுகிய சத்திய வ்ரதனைநோக்கி யான் பிராமணன் சக்திதேவனென்று என்பெயர். வர்த்தமானபுரமென்றநகரத்தினின்றும் புறப்பட்டேன். யான்கனக

புரியென்னும்நகரத்திற்கவசியம்போகவேண்டும். ஆனாலந்நகரமின்னவிடத்திலிருக்கின்றதென்பதையறியாதவனாகி நெடுநாள் வெகுதூரம் பூமியைச்சுற்றியலேந்தேன். பின்பு தீர்க்கதபசென்ற முனிவரிடம்வந்து தெரிவிக்க அம்முனிவர் அந்நகரத்தினைக்கேட்டிருப்பதில்லையென்றும் அதுத்வீபாந்தரத்திலிருக்கக்கூடுமென்றும் கருதி அதனையறியவேண்டுமென்றால் உத்தலத்வீபத்தில்வசிக்கின்ற நிஷாதபதியான சத்தியவ்ரதனிடம்போகவேண்டுமென்றுத்திரவளிக்க அப்படியேயானும் கடல்மார்க்கமாகவரும்போது கப்பலுடைந்து சமுத்திரத்தில் மூழ்கி மச்சத்தினால்விழுங்கப்பட்டு இப்பொழுது இங்கு வந்தேன் என்றுசொல்லிய சக்திதேவனைக்குறித்து ஐயா பிராமணரே, யான்தான்சத்தியவ்ரதன் உம்மாற்குறிக்கப்பட்ட வுத்தலத்வீபமுமிதுதான். ஆனால் நான் வெகுதீபாந்தரங்களைப் பார்த்திருக்கின்றேன். அந்தக்கனகபுரியை மாத்திரம்பார்த்ததில்லை. நீர்கருதுகின்ற அந்நகரம் த்வீபாந்தரத்திலிருப்பதாய்க் கேட்டிருக்கின்றேன் என்று சொல்லலும் சக்திதேவன் இதென்ன ஆச்சரியமிவருமதனைப் பார்த்ததில்லை யென்கின்றாரே என்று நினைத்து முகம்வாடிக் கலக்கமுற்றான்.

அதனைக்கண்டு மறுபடியும் சத்தியவிருதன், வெகுதூரத்திலிருந்து நம்மையேதேடி வந்திருக்கின்றானிவனென்று பிரீதியால் ஓ பிராமணரே, நீர்வருத்தமடைதல்வேண்டாம். இன்றிரவுமாத்திரமிவ்விடத்திற்றங்கியிரும். நாளைக்காலையிலேதேனுமோருபாயஞ்செய்கின்றேன். உமதிஷ்டத்தைநிறைவேற்றுதற்கென்று அவன்மனம்மகிழும்படி சொல்லி போஜநத்திற்காக அதிதிகளை யுபசரித்தன்னமளிக்கின்ற பிராமணர்கள் மடத்திற்கனுப்ப, அந்த சக்திதேவனுமவ்விடம் சென்றங்குள்ள வொரு பிராமணனன்புடனளித்த அன்னத்தை புஜித்துவிட்டு விஷ்ணுதத்தனென்ற பெயருடன்கூடிய பார்ப்பானுடன் கவிகள் விஸ்தரித்துக் கூறியிருக்கின்ற கதைகளைப்பேசிக்கொண்டிருக்குங்கால் அந்தப்ரஸ்தாவத்தோடு ப்ரஸ்தாவமாய் விஷ்ணுதத்தன் உமது விருத்தாந்தம் யாதென்றுகேட்க, சக்திதேவன் தன்தேசம் குலம் விருத்தாந்தமிவற்றையெல்லாம் அவனிடம்சொல்லுலமுடனேயவன் சக்திதேவனைத்தழுவிக்கட்டிக்கொண்டு கண்களிலானந்தபாஷ்பம் பருகக்கண்டத்தின் குரல்மாறுபட்டுச் சொற்கள் தத்தளிக்கும்

படி அப்பா சக்திதேவா, நீ யென்மாமன்மகனன்றோ தைவகதியாலுன்னை யிப்போது காணப்பெற்றேன். நாமிருவருமோரேதேசத்திற்பிறந்தவர்கள். யானந்ததேசத்தினின்றும் முன்பேபாலியத்திலிவ்விடம் வந்துவிட்டேன். நீ யினிமேற்கவலைப்படவேண்டாம். பலதீபாந்தரங்களினின்றும் வருகின்றவணிகர்கள்மூலமாய் அந்நகரிருக்குமிடத்தைக்கேட்டுத்தெரிந்து சீக்கிரத்திலுனதிஷ்டத்தை முடித்துக்கொள்ளலாமாதலால்,நீ யிவ்விடத்திலேயிரு என்றுசொல்லி விஷ்ணுதத்தன் தன்வம்சத்தின் விருத்தாந்தத்தையுந்தெரிவித்து அவனுக்கு வேண்டுமுபசாரங்களைச் செய்து மகிழ்வித்தனன்.

சக்திதேவனும் தான் வழியிலடைந்த சிரமத்தையெல்லாம் மறந்து சந்தோஷமடைந்தான். ஒருவனுக்குமுகமறியாததேசாந்தரத்தில் பந்துஜனங்களைக்கிட்டுதலானது நிர்ஜலதேசத்தி லமிருதப்ரவாஹம் கிடைத்ததுபோலாகின்றது. அப்போதவன் தன்னிஷ்ட சித்தியை சமீபத்திலிருக்கின்றதாகவே கருதினன். ஏனெனில் ஒருகாரியத்திற் பிரவேசித்தவனுக்கு அதனிடையில் ஒரு நன்மை கிடைக்குமாயின் அது தன்காரியம் நிறைவேறுமென்பதற்கறிகுறியாகின்றதல்கில் பின்பு அன்றிரவினில் நித்திரையின்றிப் படுக்கையிலிருந்தவண்ணமே தானெண்ணிய காரியம் முடிவுபெறவேண்டுமேயென்றுகவலையுற்றிருக்கின்ற சக்திதேவனைக்குறித்து அவன் பக்கத்திலிருக்கின்ற விஷ்ணுதத்தன் நீ யெண்ணியகாரியம் முடிவுபெறுங் கவலைப்படவேண்டாமென்று அவன் நம்புதற்குரியகாரணங்களையெடுத்துக்காட்டி விநோதத்தை யுண்டுபண்ணிப் பின்வருமாறு ஒருகதைசொல்லத்துடங்கினன்.

முற்காலத்தில் யமுநாநதியினருகிலிருக்கின்ற பெரியதோரகக்கிரகாரத்தில் பிராமணர்களிற்சிறந்த கோவிந்தஸ்வாமியென்னும் பெயரினையுடைய ஒருவரிருந்தனர். நற்குணங்கள் நிறைந்த அந்த அந்தணருக்கு ஒத்தகுண முள்ளவர்களான அசோகதத்தன் விஜயதத்தனென்ற இரண்டு புதல்வர்கள் முறையே ஜனித்தனர். அவர்கற்பினிற்சிறந்த தன்மனைவியோடும் நற்குணங்கள்வாய்ந்த தன்புத்திரர்களோடும் கூடி யில்லறத்தின்வழுவாதொழுகிவந்தனர். இவ்விதம் சிலநாள் கழிந்தபின் அவ்வூரில்வசிக்கின்ற அவர்கட்குக் கொடிய துர்ப்பிக்ஷம்

நேர்ந்தது. அதனால்கோவிந்தஸ்வாமியென்பவர் மனவருத்தமுற்றவராய்த் தன்மனையாளை நோக்கி ஹேப்பிரியே, இத்தேசமானது பஞ்சத்தின் கொடுமையினால் மிகவும் நலிவடைந்துவிட்டது. ஆதலால் யான் நமதுமித்திரர்கள் பந்துக்களிவர்களுடைய வறுமையைக்காணுதற்காற்றாதவனாகயிருக்கின்றேன், நமக்குள்ள வுணவுபதார்த்தங்களினின்று மெவரெவர்கட்கெவ்வளவு கொடுக்கப்படுமோ வதனையவர்கட்குக் கொடுத்துவிட்டித்தேசத்தினின்று வெளியேறிச்சென்று வசிப்பதற்குக் காசிநகரத்தைச்சார்தல் வேண்டுமென்றனர்.

(தொடரும்.)

---

# இந்தியா இறைமாட்சி.

(முற்றொடர்ச்சி.)

---

8. அரசர் காக்குமுறை:—குழந்தைகளைப் பெற்றோர் காப்பது போலக் குடிகளை அரசன் காக்கவேண்டும். அளத்தற்கரிய அறிவு அன்பு கண்ணோட்டங்களைப்பொருந்தல் வேண்டும். இனையர் ஆட்சிக்குட்பட்ட குடிகள் அடுப்புத்தீ வெம்மையும் ஆதித்தன் வெம்மையுமல்லது பிறிதுவெம்மை யறியாராய் இன்புற்றுவாழ்வர் என்ப. இதனை, "காவல்குழவிகொள்பவரினோம்புமதி" என்னும் நரிவெரூஉத்தலையார் வாக்கானும், "அறிவும் ஈரமும்பெருங்கண்ணோட்டமும் (அளத்தற்கரிமை) சோறுபடுக்குந்தீயொடு செஞ்ஞாயிற்றுத்தெறலல்லது பிறிதுதெறலறியார் நின்னிழல் வாழ்வோரே" என்னும் குறுங்கோழியூர் கிழார் வாக்கானும் தெளிக.

9. இறைப்பொருள் கோடல்:—தம் நாட்டுவிளைவுப் பொருள்களில் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான் என்ற ஐவர் பாதுகாப்பின் பொருட்டாக ஐந்துகூறுகுடிகள் கொள்ள அரசர் ஆறிலொரு கூறுதிறைகொள்ளவேண்டு மென்புதூஉம், அதைத்தானும் குடிகள் வருந்தாவாறு அற்றநோக்கிப்பெற்றுக் கோடல்வேண்டுமெ

ன்பதூஉம் அவ்வாற்றாற்கொண்ட பொருளே அறத்தையும் இன்பத்தையும் பயப்பதாமென்பதாமென்பதூஉம் ஆன்றோர் கருத்தாம். இவ்வாறுதலே,

"ஊறின்றுவகையுள் வைகவுயிரோம்பி
ஆறிலொன்றனுதளித்துண்டு—மாறின்றி
வான்காவல் கொண்டான் வழிநின்று வைகலும்
தான்காவல் கொண்டல் தரும்"

என்று ஐயனரிதனர் கூறுதலானும்,

"அறனீனு மின்பமு மீனுந்திறனறிந்து
தீதின்றி வந்தபொருள்."

என்ற பொய்யில் புலவர்கட்டளையானும் செவ்விதுணரத்தகும். இஃதன்றியும் வைத்தாரிறப்பப் பன்னாள் நிலத்திற்கிடந்து பின்னர்க்கண்டெடுக்கப்பட்ட நிட்சேபப்பொருளும், தாயத்தாராதி உரியவரில்லாப் பொருளும், கலத்தினும்காலினும்வரும் பண்டங்கட்கு விதிக்கும் சுங்க இறைப்பொருளும், பகைவரையடர்த்து அவர்பாற்கொள்ளுந் திறைப்பொருளும் ஆகிய இவைகளும் அரசர்க்கேயுரியனவாம். இதனை,

"உறுபொருளு முல்குபொருளுந் தன்னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன்பொருள்."

என்னும் வள்ளுவதேவர் வாக்காற்காண்க. இங்ஙனம் தமக்குரிய இறைப்பொருளை அரசர்கொள்ளு முறையை மிகப் பொருத்தமான ஒரு உதாரணத்தால்விளக்கியிருத்தலைக் காட்டுதும். அதாவது ஒரு மாநிலத்தில் விளைந்த நெல்லை யறுத்துவைத்து ஒருயானைக்குக்கவளமாகக்கொடுப்பக்கொள்ளின் அந்நெல் அக்கரிக்குப் பன்னாளுணவாகும். நூறுசெய்யில் விளைந்தநெல்லேயாயினும் அவ்யானைதானே சென்று உண்ணுமாயின் அதன் வாய்ப்படும் நெல்லினும் பலவற்றையதன் கால்கள் சிதைத்தொழிக்கும். அரசனும் அறிவுடையனுய் முறையறிந்து திறைகொள்ளின் அவன்நாடு சிறிதாயினும் கோடிபொருளைக்கொடுத்துத் தானும் செழிக்கும். அல்லாக்கால் அவனும் பொருள்பெறான். உலகமுங்கெடெய்தும் என்பதே. இது:—

"காய்நெல் லறுத்துக் கவளங்கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடைவேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவனாகி வைகலும்
வரிசை யறியாக்கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டநச்சின்
யானைபுக்க புலம்போலத்
தானு முண்ணானுலகமுங் கெடுமே."

என்னும் புறப்பாட்டிற் கண்டது.

10. இறைப்பொருள் கொள்ளாமை:—இங்ஙனம் கொள்ளற்பாலவாய இறைப்பொருளைக் கொள்ளாது விடுங்காலமுமுண்டு. அது அரசர்குடும்பத்திற் சுபகாரியங்கள் நிகழ்வுழி அவர்க்குளதாய மகிழ்ச்சியைத் தம்தேயத்துக்குடிகளனைவரும் அடையுமாறு "நான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்." என்றதிருமந்திர வாக்குப்படியே இறைப்பொருள் திறைப்பொருள் சுங்கப்பொருள்களைக்கொள்ளாது விடுதலும் பண்டாரத்திற்கிடக்கும் பொருளையும் கண்டாருங் கொள்ளத்திறந்து விடுதலுமாம். அப்போது சிறைவிடுதலுமாகிய இவை பண்டைவழக்காறேயாமென்க.

"சிறைவிடுமின்சிறைக்களமுஞ்சீத்திடுமினேழாண்டுதேயத்தீட்டும்
இறைவிடுமினயல்வேந்தர்திறைவிடுமினிருநிதியமீட்டமோயத்
துறைவிடுமினாலயமுமறப்புறமும்பெருக்குமெனத்தொழாரைக்காய்ந்து
கறைவிடுமினயில்வேலான்வள்ளுவனைக்கூய்முரசங்கறங்கச்சாற்றி."

எனமலையத்துவசபாண்டியன் மகட்பேறுற்றுழிக்கொண்ட பெருமகிழ்ச்சியால் இவைசெய்தான் எனக்கூறும் பரஞ்சோதிமுனிவர்வாக்கும்,

"இறைதவிர்ந்திடுகபார் யாண்டொரேழ்சிறை
நிறைதருசாலைதாணீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்துகொள்கெனா
அறைபறை யென்றனனரசர் கோமகன்."

எனத் தசரதசக்கரவர்த்திபுத்திரப்பேறுற்றுழிச்செய்தமையைக்கூறு ம்கம்பநாடர்வாக்கும் இவற்றிற்குப்போதிய சான்றாதல் பெறப்படும். அன்றியும் குடிகள் விளைவஃகலால் செழிப்புற்றுத் தளர்வுற்றுழியும் இறைகொள்ளாது விடுதல் நீதிநூலார் கோட்பாடேயாமென்பதை,

"குடிதளர்வுற்றகாலை கொள்பொருளாறிலொன்றும்
விடுவதுசெய்துதங்கள் விழுக்குறைமுறைசொல்வார்க்குத்
தடையறக்காட்சிநல்கித் தண்ணியவின்சொற்காட்டி
வடுவறவிடித்துச்சொல்வார் வன்மொழியேற்றல்வேண்டும்."

என்னும் விநாயகபுராணத்தாற் றெரியக்கிடக்கின்றது. இங்ஙனம் இறைவிடுதலும் சிறைவிடுதலும் நூற்பிரமாணங்களாற்காட்டலொன்றோ. இப்போதும் நம்மையாளும் மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இவ்வாறு இறையையும் சிறையையும் விடுத்து வருகின்றார்களல்லவா? விளைவுபெறாக்கால் குடிகள்வருத்தநோக்கிப் பகுதிப்பொருள் கொள்ளாதுவிடுதல் சட்டத்தின் பாற்பட்டதொன்றாகவே யமைந்துள்ளதாகும். நம் இந்தியா சக்கரவர்த்தியவர்கள் முடிசூட்டுமகோற்சவகாலத்திலும் மற்றும் ராஜகுடும்ப சுபகாலங்களிலும் எத்தனையோ பேரைச்சிறைச்சாலை விட்டோட்டினரன்றோ? இத்தகையநீதிமுறைகளை நாம் கண்கூடாகக்கண்டிருந்தும் நம்மரசர்பாற் செற்றங்கோடல் ஆராய்ச்சிக்குறையேயன்றி வேறென்னம்?

11. காட்சிக்கெளியராதல்:—வலியரான் நலிவெய்தினோர் முறைவேண்டிவந்துழி அரசன் துயில்கின்றான், வாசநீர்தோய்கின்றான் பூசை பயில்கின்றான் பல்சுவைய உண்டி அயில்கின்றான் என்று கடைகாப்பாளராற் றள்ளுண்ணப்பெறாதவாறு பேரத்தாணிமண்டபத்தின் கண்ணே சான்றோர் சூழக்காலந்தவறாதுவீற்றிருந்து காட்சிகொடுத்துக் குறைகேட்டு இனியகூறி முறைபுரியவேண்டும்.

"காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லனல்லனேல்
மீக்கூறுமன்னனிலம்"

என்பது வள்ளுவர்திருவாக்கு. நம் ஆங்கிலராஜாதிகாரிகள் எங்கும் ஒருபடித்தாக நியதிசெய்துள்ளகாலத்தில் யாவர்க்கும்பொதுவிடத்திருந்து குறையுடையார் விண்ணப்பத்தையேற்றுச்செய்வன

செய்யுமாறு ஏற்பட்டிருக்கும் பிரிட்டிஷ் சட்டமுறை மிகப்பாராட்டற்பாலதேயாம். இதற்குவேறு சான்றுகூறவேண்டா. மன்னன் நிலம் மீக்கூரும் என்றதேவர்வாக்கின் படியன்றோ இந்தியா சக்கரவர்த்தியவர்கள் அரசாட்சியிடம்பரவுவதாயிற்று. சூரியாஸ்தமனமில்லாத தேசம் நமது பிரிட்டிஷ்கவர்ண்மெண்டாருடையதன்றோ! இக்கருத்தை,

"எந்தமன்னர்நாட்டினிலுமிரவியஸ்தமனமில்லா திருத்தலுண்டோ
சொந்தமுறுமிவர்நாட்டினிரவியொளியெப்போதுந்தோன்றுமாதோ"

என நம் நாட்டுப் புலவரொருவர் நன்குபாராட்டிக் கூறியிருக்கின்றனர். ஆங்கிலபாஷையிலும், "The sun never sets in the British Empire" என்றபழமொழி வழங்குவதாகும்.

12. **இடித்துரைபொறுத்தல்:**—காமம் வெகுளிகடும்பற்றுள்ளம் மானம் உவகை மதமெனப்பட்ட அறுவகைக்குற்றமும் முறைமையிற்கடிந்து காவற்சாகாடு உகைத்தற்குரிய அரசர், தீநெறிவிலக்கிநன்னெறிச்செலுத்தும் பேரறிவுடையாரைத் தமக்குத்துணையாகக்கொண்டு மழையினது இன்மை மிகுதிகளானுங்காற்றுத் தீப்பிணியென்றிவற்றானுறுவதாகிய துன்பங்களை உற்பாதங்களானறிந்து கடவுளரையும் தக்கோரையுநோக்கிச்செய்யும் சாந்திகளால் நீக்கியும், பகைவர் கள்வர் சுற்றத்தார் வினைசெய்வார் இன்றிவர்களானுறுந்துன்பங்களைச் சாமபேததானதண்டமாகிய நால்வகையுபாயங்களுளேற்றவாற்றானீக்கியும் முறைசெய்யுங்கால் அவர் தமக்குத்தக்க இன்ன தகாதன இன்னவென இடித்துக்கூறுபவரை ஐம்பெருங்குழுவென்பர்,

"மந்திரியர் புரோகிதர் சேனுபதியர்
தந்திரத் தூதர் சாரணரென்றிவர்
அந்தமிலரசர்க் கைம்பெருங் குழுவே"

என்பது பிங்கலந்தை. அரசர் அத்தாணிமண்டபத்து வீற்றிருக்குங்கால் இவ்வைவகையாரும் சூழவிருத்தல்வேண்டும். இவரையில்லாத வேந்தன் பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கேடுகூடுமென்பர். இதனை,

"இடிப்பாரையில்லாத வேமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும்"

*

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

எனவரும் வள்ளுவரானறிக.

13. மந்திரத்தலைவரைத்தேர்தல்:—மேற்கூறியாங்கே ஐம்பெருங்குழுவினரும் அரசர்க்கு இன்றியமையாத் துணைவரேயாயினும் இவருள் வைத்து, அமைச்சர்களே மிகச்சிறந்தவராவர்.

"...சமைத்ததோள்வலி தாங்கினராயினும்
அமைச்சர் சொல்வழியாற்றுத லாற்றலே"

எனக்கம்பநாடர் கூறியவாறு அரசர் எத்துணை நுண்மாணுழைபுலம் பெற்றவராயினும் மந்திரத்தலைவர் கூற்றைமேற்கொண்டு உலகியல் நடாத்தற்குரியராதலின் அவரைத்தெரிந்துகொள்ளுங்கால் பலவாற்றானும் நன்கு ஆராய்ந்து தெளிவுற்றுக்கொள்ளவேண்டும். இங்ஙனம் ஒருவரை ஆராயுமிடத்து புரோகிதராதியரை விட்டு அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப்போக்கி அறனுமுரிமையுமுடையானொருவனைவேந்தாக்கற்கெண்ணினம். இதுதான் யாவர்க்குமியைந்தது. நின்கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய அறவுபதையானும்; சேனைத்தலைவராதியரைவிட்டு அவரால் இவ்வரசன் இவறன்மையுடையனாதலின் இவனைப்போக்கியீகையுமுரிமையுமுடையானொருவனை வேந்தாக்கற்கெண்ணினம். இதுதான்யாவர்க்குமியைந்தது. நின்கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய பொருளுபதையானும்; தொன்றுதொட்டு உரிமையொடு பயின்றுளோர்தவ முதுமகளைவிட்டு அவளால் உரிமையுள்ள இன்னாள் நின்னைக்கண்டு காமுற்றுக் கூடுவேண்டி என்னை விடுத்தனள். அவளைக்கூடுதியாயின் அதனால் நினக்குப்பேரின்பமேயன்றி அரசசெல்வமுங் கைகூடும். நின்கருத்தென்னையோவெனச் சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய இன்ப உபதையானும்; ஒருநிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையரை அவனில்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவாரென்னெண்ணற்குக்குழீஇனாரென்று தான் காவல்செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக்கொல்வான் சூழ்கின்றமையான் அதனை நாமே முற்படச்செய்து நமக்கினியகாவலனொருவனை வைத்தல் ஈண்டையாவர்க்குமியைந்தது. நின்கருத்

தென்னேயோ எனச்சூளுறவோடு சொல்வித்தறிதலாகிய அச்சவுப தையானும் அவர்மனநிலையை யாராய்ந்து அவற்றிலொன்றானும் திரி பிலராயின்பின்பு தெளிந்துகொள்ளப்படுமென்பர். இதனை,

"அறம்பொருளின்பமுயிரச்சநான்கின்
றிறந்தெரிந்து தேறப்படும்"

என்னும் தேவர் வாக்கானும் அதன் உரையானும் காண்க. இங்ங னம் பொதுவகையாற்றேறிய உபதைகளான்கானுந்திரிபிலராயினும், அவர்மாட்டுவைத்த வினைவகையானுந் தேர்ந்துகொள்ளவேண்டும். என்னை? சீவகன்பிதாவான சச்சந்தன் என்னுமரசனின் மந்திரி யாகிய கட்டியங்காரன் அரசனுக்குக் கண்ணுமிடுகவசமும்போற் கா ரியஞ் செய்தொழுகினனாயினும் அவன்மாட்டுச்சின்னாள் அரசுரிமை யை வைத்தலான் அவ்வரசவின்பத்தை வெஃகிநன்றிமறந்து வேந்த னைக்கொன்றுதானே அரசனாயினன், என்பதாலென்க. இதனைத் தெரிந்தன்றே பொய்யில் புலவரும்,

"எனைவகையாற்றேறியக்கண்ணும்வினைவகையால்
வேறாகுமாந்தர் பலர்"

என்று கூறுவாராயினர். ஆகவே அரசன் ஐம்பெருங்குழுவினரைச் செவ்விது தெரிந்து தெளிந்து நியமித்து முறைபுரியவேண்டுமென்ப தாயிற்று.

நமதுதேசம் ராஜப்பிரதிநிதிகளாகியமந்திரிகளானே ஆளப்பட்டு வருவதாதலினானும் நமது சுகதுக்கங்களனைத்தும் அவர் குணஞ் செ யல்கட்குட்பட்டனவாதலினானும் நமதுமேன்மைதங்கிய பிரிட்டிஷ்க வர்ண்மெண்டார் இந்த மந்திரியர் இத்தனையாண்டுவரைதான் முறை நடத்தற்குரியர் எனக்காலவரையறை செய்திருப்பதும், அவர்க்கு மேல் பார்லிமெண்டு சபையார் பரிசிலனை ஏற்படுத்தியிருப்பதும் அ வரது அதிமதிநுட்பத்திறத்தைக் காட்டுகின்றனவல்லவா?

14. முறை கேட்டல்:—குறைபாடுடையோர் மனம்புண்பட்டு வெதும்பிவந்து கூறுவனயாவும் அமைதியுடன் செவிகொடுத்து சின த்தானும் அவலத்தானும் அன்னார் கூறுஞ்சொற்கொடுமைகளைக்கவ னியாது உண்மைகாணுஞ் சிந்தனைகொண்டு தாமினிது கூறிக்கேட்ட

லே விசாரணையியல்பாம். பாண்டியன் நெடுஞ்செழியன் பொற்கொல்லன் சொற்கேட்டுக் கோவலனைக் கொல்வித்தகாலை அக்கோவலன் மனைவிகண்ணகியென்பாள்போந்து வாயில் காப்பாளராற்றன்வரவை மன்னற்குணர்த்தி அழைக்கப்பட்டு மவனெதிர்போந்து தான்குறை கூறியவாசகங்களும் பாண்டியன்சொற்களும் இம்முறையை நன்கு புலப்படுப்பனவாதலின் அவற்றையீண்டுத் தருகின்றாம். கண்ணகி அரமனை வாயிலிற் போந்து நின்று,

வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
யிணையரிச் சிலம்பொன்றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப்பாயேயறிவிப்பாயே. (என்றதூஉம்.)

வாயிலான்—கணவனை யிகந்தாள் கடையகத்தாளே—என

பாண்டியன்—வருகமற்றவட்டருகவீங்கென
வாயில்வந்து கோயில் காட்டக்
கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி

பாண்டியன்—நீர்வார்கண்ணை யெம்முன் வந்தோய்
யாரையோநீ மடக்கொடியோய்—எனத்

கண்ணகி—தேரா மன்னா செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
வாவின் கடைமணி யுகுநீர் நெஞ்சு சுடத்தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச்சிறப்பினிசை விளங்கு பெருங்குடி
மாசாத் துவன்றன் மகனையாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேஎனப்

பாண்டியன்—பெண்ணணங்கே? கள்வனைக்கோறல் கடுங்கோலன்று
வெள்வேற் கொற்றங் காண்என—ஒள்ளிழை
கண்ணகி—நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் சிலம்பு மணியுடை யரியே எனத்
பாண்டியன்—தேமொழியுரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச்சிலம்பு முத்துடையரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி யணிமணிக் காற்சிலம்புடைப்ப
மன்னவன்வாய் முதற்றெறித்தது மணியே மணிகண்டு
தாழ்ந்தகுடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய்கொல்லன் றன்சொற்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென்னுயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

என்பது (சிலப்பதிகாரம்.)

இங்கே துயருற்றுப்போந்த கண்ணகி இன்ன இடத்து இன்னவாறு பேசவேண்டுமென்ற முறைகருதாது வாயிலோன்பால் வந்து "அறிவு அறைபோகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன்வாயிலோயே" என்றுகூறியதும், அவள்வரவுகேட்டசெழியன் அக்கணமே தாழாது "வருகமற்றவட்டருக" எனக்கட்டளையிட்டதும், அவள் தன்னிடைப்போதாலும் அழுமுகத்தளாதல் கண்டு இரக்கமுற்று "நீர்வார்கண்ணையெம்முன்வந்தோய், யாரையோ நீ மடக்கொடியோய்" என இன்சொற்கூறி வினவுதலும், அவள் மன்னவனிவனென மதிக்கிற்றிலளாய் "தேராமன்னா செப்புவதுடையேன்" எனக்கொதித்துக் கூறலும், அவ்வாறு இழிப்புரை கூறிய அவளைச்சினவாது "பெண்ணணங்கே - கள்வனைக்கோறல் கடுங்கோலன்று - வெள்வேற்கொற்றங்காண்" எனவேந்தன் நயம்பட்டசொற்கூறுதலும், அதுகேட்ட அவள் "நற்றிறம்படராக்கொற்கைவேந்தே" என இழித்துரையாடலும், அவள் சிலம்பினின்று முத்துத்தெறிப்பக்கண்டமன்னன் தாழ்ந்தகுடையனாய்த்தளர்ந்தசெங்கோலனாய் "பொன்செய்கொல்லன்றன் சொற்கேட்டயானோ அரசன் யானே கள்வன், மன்பதைகாக்குந்தென்புலங்காவல், என்முதற்பிழைத்தது,

கெடுக என்னுயுள்" எனமயங்கி வீழ்தலும் இன்னபிறவும் எத்துணை அருமைவாய்ந்துள்ளன என்பதுயாம் கூறுமலே யறியத்தக்கனவாம ன்றோ? அன்றியும் குறையுடையளாகிய கண்ணகிதன்னை இன்னளெனக் கூறுமிடத்து "புள்ளூறுபுன்கண் தீர்த்தோன் அரும்பெறற்புதல்வனை ஆழியின்மடித்தோன், புகார் என்பதி" என்றுதன் நாட்டரசர் மனுநீதியைச் சிறப்பித்துக்கூறிய அழகு இச்சந்தர்ப்பத்தில் மிகவும் வியக்கத்தக்கதாகின்றதன்றோ? இவற்றால் குறையுடையார்வந்து முறையிடுங்காலை அவர் மனங்கொதித்துக் கூறும் கடுமொழிகளனைத்தையும் பொறுமையுடன் செவிகொடுத்துக் கேட்டலும் தாம்விடை கூறுங்கால் நயமொழியே கூறவேண்டுமென்பதும் அரசர்தன்மையாமென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்படுமென்க.

(இன்னும் வரும்.)

எம் கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## சிதம்பரசுவாமிகள் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

"அரசனது செல்வம் குடிகள்பிரையாசையாலீட்டியதன் பகுதியாதலும், கைக்கோளப்பெண்ணின் செல்வம் தானே தேகப்பிரையாசைப்பட்டு ஈட்டியதுமாகிய வேறுபாட்டைக் கருதி அவற்றின் ஏற்றத்தாழ்வை அறிவொழுக்கங்களிற் சிறந்தவரான சுவாமிகள் தாம் நன்குமதித்துப் பேசியவற்றாலும், உபயோகித்த வகையாலும் உலகுக்கு உணர்த்தினரென்பதாம். கைத்தொழிலின் உயர்வு இங்கு விளக்கப்பட்டது; "நும்மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ" என்ற திருவாய்மொழியையுங்காண்க.

இவ்வாறு அன்பர்களால் விநியோகிக்கப்பட்ட காணிக்கைகளைக் கொண்டு கோயிற்றிருப்பணிகளை யாதோரிடையூறின்றி இனிது

நிறைவேற்றி, மந்திரலோபங்களின்றிய யந்திரஸ்தாபனமமைத்துக் கிரியா லோபமாதிய குற்றங்களைந்து கும்பாபிஷேக முதலியன முடித்து நித்திய நைமித்தியங்களை நடத்திவந்தனரெனக் கூறுப.

முன்னர் "நெஞ்சுவிடுதூது" என்னும் பிரபந்தமியற்றி ஆசிரியர் பாலனுப்பிவிட்டு ஆலயத்திருப்பணி நடத்திவருங்காலத்துப்பிள்ளைத் தமிழ், அலங்காரம், மாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி முதலிய பல சிறு நூல்கள் அடங்கியதான "திருப்பேரூர்ச் சந்நிதிமுறை" என்னும் ஓர் நூலையும், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஈசுவரனது பஞ்சகிருத்தியங்களையும் விளக்குவதான "பஞ்சாதிகாரவிளக்கம்" என்னும் வேதாகமநூலொன்றுமியற்றி முடித்தனர். பின், திருத்தொண்டர் அறுபத்துமூவரிலொருவராய "திருமூலர்" என்னும் நாயனாரால் இயற்றியதும், சைவசமயத்துப் பன்னிரு திருமுறைகளிற் பத்தாந்திருமுறை யெனப்படுவதும், பெரும்பாலும் உருவகமும் பரிபாஷையும் பொதிந்த செய்யுட்களுடையதுமான "திருமந்திரம்" எனப்படும் அரியநூலுக்கு ஓர் உரையியற்றவு முயன்றனர். அஃதுணர்ந்த பொனைனின் ஆசைமிகுதியுடையானொருவன் உளங்களித்து உலகத்தைப் பொன்னாக்குவிப்பேனென்று எண்ணங்கொண்டதைக் குமரவேள் அறிந்து அந்நூலுக்கு உரையியற்றவேண்டாமெனச் சிதம்பரப்புலவரைத் * தடுத்தனரென்ப.

"இரசவாதம் முதலிய சித்திவகையாற்பொன்செய்யுமாசையுடையானொருவன், பற்பல சித்திகளைக்கூறியுள்ள அந்நூலை மேல்நோக்காகப்பார்த்து அதன்பொருளை உள்ளபடி உணர்ந்தால் அச்சித்திபெறலாமென்று எண்ணினனாதலின், இவர் அதற்கு உரைசெய்யக் கருதினரென்று அறிந்தவளவில் மிக்கமனமகிழ்ச்சியும், அது தவிர்ந்தனரென்றவளவில் மிக்கமனவருத்தமுங் கொண்டனனெனக்க. அத்திருமந்திரநூலில்,

"வெள்ளியுருக்கிப் பொன்வழியோடாமுன்
கள்ளத்தட்டனார் கரியிட்டு மூட்டினார்

---

* இதனை வேதாகமங்களின் மறைபொருள்கள்பல இந்நூலிற் பொதிந்திருத்தலால் அவற்றைக்குருபரம்பரையாக அறிதலன்றி அதிகாரிகளல்லாதவரும் எளிதிலறியுமாறு வெளியிடுதல் தகாதென்பதுபற்றி முருகபிரான் இதற்கு உரைசெய்யக்கூடாதென மறுத்தாரெனவறிக.

கொள்ளிபறியக் குழல்வழியே சென்று
வள்ளிய ஞவிலடக்கி வைத்தானே.''

"செம்பு பொன்னாகுஞ் சிவாயநம வென்னில்,"
"வாறேசெபிக்கில் வருஞ்செம்பு பொன்னே,
"பொன்னான மந்திரம்புகலவு மொண்ணாது,'
"பொற்பாதத்தானையே செம்பு பொன்னுயிடும்,"
"மறையொன்றுகண்டதுருவம் பொன்னாமே,''
என்றவைபோல்வன அவன் மனத்தைக் கவர்ந்தனவென்க.

மூன்தாம் வீற்றிருந்த புளியமரத்தின் தென்கிழக்கில் ஒரு பரிணமம் நிருமித்து, அதன்வடபாலிருந்த சிறுகுளத்தைத் தடாகமாக்கி அதன்மேல்பால் ஓர் சிற்றாலயங்கட்டுவித்து அதில் விநாயகப்பிரதிஷ்டையும், வேலாயுதப்பிரதிஷ்டையுஞ்செய்து அப்பிள்ளையார்க்குச் "சுந்தரவிநாயகர்" என்றும், தடாகத்திற்கு "வேலாயுததீர்த்த"மென்றும் பெயர்தந்தனர்.

பின்னர் கிளியனூர் அம்மைமேல் அருள்புரிந்து "ஞானம்மை'' எனத்தீட்சாநாமந்தரித்தனர். அந்த ஞானம்மை நெடுநாளிருந்து ஓர் ஏகாலிப்பெண்ணுக்கு அநுக்கிரகஞ்செய்து சுவாமிகள் கட்டளையால் கிளியனூரையடைந்து "நிஷ்டானுபவம்'' என்னும் சாஸ்திரமியற்றி அநுபூதியிலொடுக்கமுற்றனள். ஏகாலியம்மையும் விசேஷ ஞானத்தோடு சிலகாலம்வாழ்ந்து அவ்வூரிலொடுக்கமுற்றனள். இவ்விருவர் சமாதிகளும் அவ்வூரில் இந்நாளளவும் அடியார்களால் ஆராதிக்கப்பட்டு வருகின்றன.

"பூவிருந்தவல்லி'' என்னும் ஊரைச்சார்ந்த "கோவூரிலே'' வேளாளர் மரபிற்றேன்றிய திரிபுராந்தக முதலியார் புத்திரர் "சிவசங்கரம்'' என்னும் பெயருள்ள ஓர் சிறுபிள்ளையை இளமைப்பருவத்திலேயே திருப்போரூர் முருகக்கடவுள் ஆட்கொண்டருள, அச்சிறுவன் சென்னியில் சடைவளரப்பெற்றுப் பித்தனைப்போல் ஓடியும்பாடியும் கூத்தாடிக்கொண்டிருந்தனன். இந்த ரகசியமறியாததந்தை ஆயுர்வேதியரைக்கொண்டு ஔஷதமுதலியவற்றால் தக்கசிகிச்சைசெய்தும், அம்மயக்கம் நீங்காமையால் திருப்போரூரடைந்து சிதம்பர

தேவரைப்பணிந்து புத்திரனை எதிரிற்கிடத்தி முறையிட்டனர். பிள்
ளையின் குறிப்பையுணர்ந்து "ஆறுமுகந்துணைசெய்யும்" என்றருளிய
வண்ணம் ஆண்டவர் கிருபையால் பிள்ளைக்கு அம்மயக்கம் நீங்கின
தால் தந்தைமகிழ்கூர்ந்து புத்திரனைச் சுவாமிகளிடத்தில் ஒப்புவித்து
விடைகொண்டனர்.

பின்பு அப்பிள்ளைக்குச் சுவாமிகள் சிவலிங்கதாரணமுதலிய
வற்றை யநுக்கிரகித்துத் திருநீற்றுப்பையும், வேலாயுதமும் ஓர் தட்
டுங்கொடுத்துக் "குழந்தாய்! இன்றுதொட்டு மடாலயத்தில் பிட்
சையேற்றுத் திருப்பணியை நடத்திவருக" என்று கட்டளையிட்ட
படி சிவசங்கரசுவாமிகள் முயன்று நித்தியகட்டளை பிரமோற்சவ
முதலியவற்றைச் சிறப்பாக நடத்திவந்தனர்.

இங்ஙனம் நிகழப்பெற்றுவருமிடையில் வைகாசிமாதமொன்
றில் வைசாகபௌர்ணமையில், தாம் சமாதியில் நிரதிசயானந்த நிலை
யிற் கலவாமற் கலந்துநிற்குஞ் செவ்விவருவதுணர்ந்து, அதற்கு
முன்னாளாகிய சுவாதிநட்சத்திரத்தில் மஹேசுவரபூஜையும், மறுநாள்
வைசாகத்தில் ஸ்ரீ சுப்பிரமணியமூர்த்திக்கு மஹாபிஷேகமும், மூன்
றும்நாட்டொடங்கி வேம்படி விநாயகர்க்கும், பிரணவமலைத்தியாக
கைலாசநாதர் சந்நிதிமுதலியவற்றிற்கு முறைப்படி அபிஷேகாதிக
ளுஞ் செய்வித்துத் தரிசனஞ்செய்து வரக்கடவை என்று கட்டளையி
ட்டு, அன்று மஹேசுவரபூஜையை நடத்திக்காட்டி மறுநாள் வைசாக
பௌர்ணமியாதலால் அபிஷேகாதி முதலியவற்றை நடத்துவிக்கும்
படிக்குச் "சிவசங்கரதேவரை" ஆலயத்திற்கனுப்பித்தாம் வேலாயுத
தீர்த்தத்தில் மூழ்கிச் சிவபூஜைபாராதனைமுடித்து ஒடுக்கத்தில் நிஷ்
டை கூடியிருந்தனர்.

அப்பொழுது முப்பதாமாண்டுதொடங்கித் தொண்ணூறுமாண்
டளவும் நாடோறுந் தவறாமல் "திருவருணகிரியை"ப்பிரதக்ஷிணஞ்
செய்துவந்த "சோணாசலதேவர்" தாம்விரும்பியாங்கு "அருணகிரீ
சர் குருமூர்த்தமாய் மானிடச்சட்டைதாங்கி ஓர் ஆதிசைவரைப்
போல் தோன்றிககட்டளையிட்டவாறு" திருப்போரூர்க்குவர, அதை
ஞானநோக்கத்தாலறிந்து வரவுபார்த்திருந்த சிதம்பரசுவாமிகளைச்
சோணாசலதேவர் அடைந்து சரணஞ்செய்து,

*

"எடுத்தசன னங்கடொறு மீன்றெடுத்த தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்தமணிப்
பைந்நா கணைத்துயின்மால் பாலாழியுஞ் சிறிதாம்
மன்னு சிதம்பர தேவா." (தமிழ்நாவலர்சரிதை.)

"நவகுணமு முக்குறும்பு நவைகண் மற்றனைத்துந் தீர்த்து
பவகுணஞ் சற்றுந்தாங்காப் பரமயோகிகளாய் நின்ற
சிவகுணச் செல்வர்போற்றுஞ் சிதம்பரதேவா வென்ற
னவகுணம் போக்கியாள்வ தையநின்கடனதாமால்"

என்றுபாடித் துதித்துவணங்க, சுவாமிகள் கருணைகூர்ந்து அவர் கோரிக்கையை நிறைவேற்றியருளித் தாம் பூஜாதிரவியங்களுடன் நிலவறைவழியாக சமாதிஸ்தானத்திலிறங்கி ஒடுக்கமுற்று நின்றனர். அச்சமயம் ஆலயத்தில் கர்ப்பூரதீபாராதனை நடந்துவருப்வேளையான தாதலால் சிதம்பரசுவாமிகள் ஆண்டவர் சந்நிதியில் அஞ்சலியஸ்த ராய்த்தோன்றி மூலஸ்தானத்தில் மறைந்திடக்கண்டு சோணாசலதே வரும், வேதியர்முதலிய பலரும் விம்மிதமடைந்தவர்களாய்ப்பெரிது ஆனந்தமுற்று ஹரஹரவென்னும் ஆரவாரத்துடன் பரவசமாயினர்.

சிவசங்கரதேவர் ஆண்டவர் அபிஷேகாதி திருப்பணிகளை அமைதியுடன் முற்றமுடித்துப் பரிணாபித்திற்கு வருகையில், ஆசிரியர் மரணதசையிலமர்ந்த முறைமைகளைக் கேள்வியுற்று அடக்கற்கரிய ஆராமைமேற்கொண்டு ஆசிரியர் ஒடுக்கமுற்ற சந்நிதியினின்று,

"இக்கலியுகத்தி லெழுந்த வென்குருவே
யின்பமே யன்பினு ணிறைந்த
முக்கனிரசமே முதிர்சுவை யமுதே
மூதறிவே மறைப்பொருளே
சர்க்கரையொடு கற்கண்டென ருசிக்குந்
தயாளுவேதமிய னேன்றனக்குத்
துக்கசாகரத்தைத தொலைத்தருள் புரிந்தாய்
தூயநீயெங் கொளித்தனையோ."

என்னும் இதுமுதலிய செய்யுட்களால் மனமுருகித்துதித்துத் துயரப் படக்கண்ட சோணாசலதேவர் ஓடோடியும்வந்து ஆராமையை ஒருவாறுற்றி, அவரைச்சுவாமிகளது ஆசனத்திலிருத்தி ஆண்டுதோறும்

வைசாகபௌர்ணமியிலும், அதற்குமுன்னாளினும் பௌர்ணமிக்குப் பின்னாள்களிலும், மஹேசுவரபூஜை அபிஷேகமுதலியவற்றைத்தவறாமல் நடத்தவேண்டுவதென்று சிதம்பரசுவாமிகள் கட்டளையிட்டருளிய முறைமையைத் தெரிவித்துத் தாமும் அமுதுகொண்டுவிடைபெற்றுத் திருவண்ணாமலைக்குச் சென்றனரென்ப.

இனிச் சிதம்பரசுவாமிகள் ஆதீனத்தில் இரண்டாவதுபட்டம் பெற்ற சிவசங்கரதேவர் முதலிய பரம்பரை விருத்தாந்தங்களை அச்சிடப்பட்டுவழங்கும் சரிதமுகத்தானறிக.

இவ்வளவே சிதம்பரசுவாமிகள் வரலாறாகத்தெரிந்தவை. இச்சரிதங்களால் சிதம்பரசுவாமிகள் தெய்வப்புலமைவாய்ந்த பெரியாரிலொருவரென்பதும், அங்கயற்கண்ணம்மையானும், அறுமுகக்கடவுளானும் வலிந்தாட்கொண்ட பேரடியாரென்பதும், ஞானசமாதிகூடியோகானுபவமறிந்து தத்துவநிலையுணர்ந்த வித்தகரென்பதும், குறையிரந்த வன்பர்களுளக்குறையை அகற்றத் திருவுளங்கனிந்த திப்பியமூர்த்தியென்பதும், குமரவேளெழுந்தருளக் கோயில்புதுக்கிய கொற்றவர்போற்றும் நற்றவச்செல்வரென்பதும், நாமகளருளும், நலஞ்சிறந்த கவிகள்வாழ்த்தும், நாடிப்பெற்ற கோடிப்புண்ணியரென்பதும், மற்றும் இவரது உத்தமகுணவிசேடங்களும் நன்குவிளங்கும்.

இவர்பெயர் சிதம்பரக்கவிராயரென்றும், சிதம்பரதேசிகரென்றும், சிதம்பரசுவாமிகளென்றும், இலக்கணச்சிதம்பரநாதமுனிவரென்றும் வழங்குவர்.

இனிச்சிதம்பரமுனிவரர்காலமின்னதென்பதை ஆராய்வோம்.

"ஆய்ந்தவின்பம் வாய்ந்துள நிறையச்
சாந்தையன்பதம் யாந்தொழுவோமே"

என்று வைராக்கியதீப உரையிலும்,

"போந்தே முயிர்க்குயிராந்துணை யொத்த
சாந்தையர் தம்பத மேந்துகருத்தே"

என்று வைராக்கியசதக உரையிலும், ஆசிரியர் வணக்கங்கூறுவதால் இவர்சாந்தலிங்கசுவாமிகள் மாணாக்கரெனவிளங்குகிறது. தமது

ஆசிரியரான குமாரதேவர்க்குச் சாந்தலிங்கசுவாமிகள் ஆசிரியராக விளங்குதலைக்குறித்து அன்பின்மிகுதியாலும், ஆசிரியரின் குரவரென்ற விசேடத்தைக் குறித்தும், மேற்கூறிய நூலுரைகளில் சிதம்பரதேவர் சாந்தலிங்கர்க்கு ஆசிரியர் வணக்கங்கூறினமை உணர்ந்து கொள்க. இக்காரணத்தால், சிதம்பரதேவரும், குமாரதேவரும் சாந்தலிங்கசுவாமிகளும் ஒருகாலத்தவராவர். இவர்கள்காலம் கி. பி. 17-ம் சகாப்தம் என்பர்.

கச்சியப்பமுனிவர், தொட்டிக்கலைசைச் சுப்பிரமணியசுவாமிகள், காஞ்சீபுரம் சரவணபத்தர், சிதம்பரபத்தர், இராமநாதபுரம் சோமசுந்தரம்பிள்ளை, முதலாயினோர் சிதம்பரமுனிவர் சகபாடிகள். இவர்கள்யாவரும் திராவிடமகாபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீமத்-சிவஞானமுனிவரிடத்துத் தமிழ்ப்பாடங்கேட்டுக்கொண்டவராவர்.

தொட்டிக்கலைசைச் சுப்பிரமணிய சுவாமிகள் காலத்தைக்குறித்து மதுரை செந்தமிழ்ப்பத்திரிகை, தொகுதி ரு-பகுதி கஉ-ல், பத்திராசிரியர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்கள் நிர்ணயித்தபடி இற்றைக்கு கக௭-வருடங்களாகின்றன. இந்நூற்றுப்பதினேழு வருடங்களையே ஸ்ரீமத்-சிவஞானயோகிகளின் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவராய இலக்கணச் சிதம்பரநாதமுனிவர்க்குக் கூறவேண்டியதாகின்றது. ஆகவே சிதம்பரசுவாமிகளின் காலம் இற்றைக்கு 117-வருடங்களுக்கு முந்தியதெனக் கொள்வதே பொருத்தமுடைத்தாம்.

சுபம்!

சிதம்பரசுவாமிகள் சரிதம் முற்றிற்று.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கோவை.

உ

சிவமயம்.

# இராமர்வதாரச் செய்யுட் பாடாந்தரம்.

## பொழிலிறுத்தபடலம்.

மீட்டுமினி யெண்ணும் வினைவேறுமுள தன்றோ
லோட்டியிவ் வரக்கரை யுலைத்துரிமை யெல்லாங்
காட்டுமிது வேகரும மன்னவர் கடும்போர்
மூட்டும்வகை யாவதுசொ லென்றுமுயல் கின்றான்.

என்னும் ௫-ம் செய்யுளில், "ஓட்டியிவ்வரக்கரையுலைத்துரிமையெல்லாங் - காட்டுமிதுவே" என்பது "ஓட்டியிவ்வரக்கரையுலைத்தென்வலியெல்லாங் - காட்டுமிதுவே" எனக்காணப்படுகின்றது. "உரிமையெல்லாம்" என்பது பொருட்பொருத்தமுடைய தன்றாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷை

சோலைமுதன் மற்றவை சுழற்றிய திசைப்போ
ரானைநுக ரக்குளகு மானவடி பற்றா
மேனிமிர விட்டன விசும்பின்வழி மீப்போய்
வானவர்க ணந்தன வனத்தையு மடித்த.

என்னும் ௧௧-ம் செய்யுளில் "சோலைமுதன் மற்றவைசுழற்றிய" என்பது "சோலைமுகிலொத்தயல்சுழற்றிய" எனக்காணப்படுகின்றது. அயலிற் சுழற்றியன குளகான; மேனிமிரவிட்டன நந்தவனத்தை மடித்த" எனப்பொருள்கொள்ளுமிடத்து அயல் என்னும் சொல்லும் "சுழற்றிய" என்னும் வினைக்கு "சோலைமுகிலொத்து" என்னும் உவமையும் இயைந்து வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. "சோலைமுகிலற்று" என்னும் பாடத்திற்கு தம்மீது படியப்பெற்ற முகில்கள் நீங்கப்பெற்று எனப்பொருள்கொள்க.

ஷை

தேனுறை துளிப்பசிறை புட்பல சிலம்பப்
பூசிறை மணித்தரு விசும்பினிடையே போய்

மேன்முறை நெருக்கவொளி வாளொடு வில்வீச
வானிடை நடாயநெடு மானமென லான.

---

என்னும் உகஎ-ம் செய்யுளில், "பூநிறைமணித்தருவிசும்பினிடையேபோய் - மேன்முறை நெருக்கவொளி வாளொடுவில்வீச - வானிடைநடாயநெடு மானமென லான" என்பது "பூநிறைமணித்தருவிசும்பின்மிசைபோவ-மீன்முறைநெருக்கியொளிவாளொடுவில்வீச - வானிடைநடக்கு நெடுமானமெனலான" எனக்காணப்படுகின்றது. தேனுறைதுளித்தலும் புட்பலசிலம்பலும் விமானத்திற்கும் பொதுவாய் வருதலின்பின்னையதேபொருத்தமுடைத்து. விமானம்-புஷ்பக விமானம். பூநிறைதருவிசும்பின் மிசைபோவ, இராவணனுடைய புஷ்பகவிமானம் ஆகாயத்திற்செல்லுதல் போலிருந்ததென்பதுகருத்து. முன்னர்க்கடறுவுபடலத்தில் "அண்டகோடிபோமரக்கனெற்றைப் - புட்பகவிமானந்தானவ்விலங்கை மேற்போவதொத்த" என உவமைகூறி, இங்கே இலங்கையினின்றும் வானிற்போவதற்கு உவமை கூறிய ஆசிரியரது அதிநுட்பமதி எவராலும் வியக்கத்தக்கது. இங்ஙனமே இவர் இந்நூலின் பற்பலவிடங்களிலும் முன்னர்க்கூறிய உவமையையே பின்னரும் வெவ்வேறு விதமாக உவமித்துக்கூறியிருக்கின்றார். அங்ஙனம் கூறினும் அவைகள் கூறியது கூறலாகாமல் மிகநுண்ணிதாகப்புணர்த்தியது எவராலும் செயற்கரியதும் அதிசயிக்கத்தக்கதுமேயாம். அங்ஙனம் உவமைபுணர்த்தியதை கார்காலப்படலத்து சு-ம் செய்யுண்முதலியவற்றில் போரின்தொடக்கமாக உவமித்து "ஆர்த்தெழுதுகள் விசும்படைத்தலானுமின் - கூர்த்தெழுவாளெனப் பிறழுங்கொட்பினும் - தார்ப்பெரும் பணையின்விண்டழங்குதாவினும்-போர்ப்பெருங்களமெனப்பொலிந்ததும்பரே" எனக்கூறிப், பின்போரின் தொலைவாக உவமித்து "மூளமர்தொலைவுறமுரசவிந்தபோல் - கோளமைகோண்முகில் குமுறலோவின - நீளடுகணையெனத் துளிபுநீங்கின - வாளுறையுற்றெனமறைந்தமின்னெலாம்" என ஷை கா௰கூ-ம் செய்யுளிற் கூறுதலாலறிக. இன்னும் இவர் கூறும் வருணனைகளெல்லாம் முன்கூறியவற்றிற்கு பின்கூறியவைகளியைபுடையவைகளாயும் ஒன்றற்கொன்று வேறான கருத்தமைந்தவைகளாயுமே இருக்கும். அது மிதிலைக்காட்சிப்படலத்து ௩அ-ம்

செய்யுளில் "மருங்கிலாநங்கையும் வசையிலையனு - மொருங்கிய விரண்டுடற் கோயிரொன்ருயினர் - கருங்கடற்பள்ளியிற் கலவிநீங்கிப் போய்ப் - பிரிந்தவர் கூடினூற்பேசல் வேண்டுமோ" எனச்சீதையினதும் இராமரதும் உயிரொன்ருனமையைக் கருங்கடற்பள்ளியின் நீங்கினமையை ஏதுவாகக்கொண்டு சிறப்பித்துக் கூறியவர், பின்நகர் நீங்குபடலத்து உஉரு-ம் செய்யுளில், "துறந்துபோமெனச்சொற்ற சொற்றேறுமோ - வுறைந்தபாற்கடற்சேக்கையுடனெரீஇ - யறந்திறம்புமென்றைய னயோத்தியிற் - பிறந்தபின்பும் பிரிவிலளாயினள்" என அதனையே வேருேர்விதமாகப்பிரியாமையாக்கி அதனையே ஏதுவாகக்கொண்டு சீதையின் பிரியவிரும்பாமையைச் சிறப்பித்தலாலறியப்படும். இங்ஙனமே இக்காப்பியம் இவ்வகையான அலங்காரமுடையதாயிருத்தலைமிக நுண்ணிதாகவோர்ந்துணர்க.

ஷை

பாடலம்படர் கோங்கொடு பன்னிசைப்
பாடலம்பனி வண்டொடு பஃறிரைப்
பாடலம்புயர் வேலையிற் பாய்ந்தன
பாடலம்பெறப் புள்ளினம் பாறவே.

என்னும் ந௬-ம் செய்யுளில், "பாடலம்பெறப்புள்ளினம் பாறவே" என்பது "பாடலம்படப்புள்ளினம்பார்ப்பொடே" எனக்காணப்படுகின்றது. முன்னையதுபொருட் சிறப்பின்ருதலிற் பின்னையதே சிறப்புடைத்து. புள்ளினம்பார்ப்பொடுபாடலம் படப்பாய்ந்தன என்க. அலம் என்பது போதும் என்னும் பொருள்பட வந்தது. அது "ஆசலம்புரியைம்பொறிவாளியும்" என இவ்வாசிரியர் முன்னர்க்கூறியதனுனும் பெறப்படும்.

இன்னும் ஷை படலத்துச் "சொல்லிடவெளியதன்ருல்" என்னும் ௬௭-ம் செய்யுளின் பின்னர் ௬௯-ம் செய்யுளும், அதன்பின்னர் ௬௮-ம் செய்யுளும் காணப்படுகின்றன. ௬௯-ம் செய்யுளும் சோலைகாப்போர் கூற்ருதலின் பின்வருதலே சிறப்புடைத்தென்க. ௬௭-ம் செய்யுளில் "சிதைந்ததென்ருர்" என்பது "சிதைந்ததன்றே" எனவும், ௬௮-ம் செய்யுளில் "மன்னவன் முறுவல்செய்தான்" என்பது "மன்னவன்மொழியும்வேலை" எனவும், ௬௯-ம் செய்யுளின்பின்னர்,

எனப்பதம் வணங்கி யன்ன ரியம்பிய வார்த்தை கேளா
கனக்குர லுருமு வீழக் கன்மலை சிதறத் தேவர்
மனத்தறி வழிந்து சோர மாகட லிரைப்புத்தீரச்
சினத்துவாய் மடித்துத் தீயோன் நகைத்திவை செப்பலுற்ருன்.

என ஒரு செய்யுளும் காணப்படுகின்றன. இவைகளும் பொருத்த மாதல் இயைபுநோக்கியுணர்க.

## கிங்கிரர் வதைப்படலம்.

---

புல்லிய முறுவ ரேன்ருப் பொருமையுஞ் சிறிது பொங்க
வெல்லையி லாற்றன் மாக்க ளெண்ணிறந் தாரை யேவி
வல்லையி னகலா வண்ணம் வானையும் வழியை மாற்றிக்
கொல்லலீர் குரங்கை நொய்திற் பற்றுதிர் கொணர்தி ரென்ருன்.

என்னும் உ-ம் செய்யுளில், "எல்லையிலாற்றன்மாக்களெண்ணிறந்தாரையேவி" என்பது "எல்லையிலரக்கர்தம்மிலிசைந்தகிங்கிரரைநோக்கி" எனக்காணப்படுகின்றது. படலத்திற்கியைந்துவருதலிற்பின்னையதே பொருத்தமுடைத்து.

ஷ உ-ம் செய்யுளின்பின்னர்,

என்றலு மிருகை கூப்பியிருநுதல் படியிற் ரேயச்
சென்றடி பணிந்து மண்ணுந் தேவருந் திசையுமுட்க
வென்றியன் றெனினும் வல்லே விரைந்துநாம் போகிவீரந்
துன்றிய குரங்கைத் தூக்கித் தருதுமென் றுரைத்துப்போனர்.

என ஒருசெய்யுள் காணப்படுகின்றது. உ-ம் செய்யுளினிறுதிக்கியைந்து வருதலினிதுவும் பொருத்தமுடைத்து.

ஷ

திருகுறுஞ் சினத்துத் தேவர் தானவ ரென்னுந் தெவ்வ
ரிருகுறும் பெறிந்து நின்ற விசையினர் வசையென் றெண்ணிப்
பொருகுறும் பென்று வென்று புணர்வது பூவுண் வாழ்க்கை
யொருகுறுங் குரங்கென் றெண்ணி நெடிதுநா ணுழக்கு நெஞ்சர்.

என்னும் ங-ம் செய்யுளில், "இருகுறும்பெறிந்துநின்றவிசையினர் வசையென்றெண்ணி- பொருகுறும்பென்றுவென்றுபுணர்வது"என்

பது "இருகுறும்பெறிந்துநின்றவிறற்கிது வசையாமீதோர் - பொரு குறும்பென்றுவென்று புகல்வது" என்பதும் பொருட்சிறப்புடைய னவாதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து. குரங்கு என்பதற்கு ஆகாரம் விரித்துப் பொருள்கொள்க.

௸

பொன்னின்று கனலுந்தெய்வப் பூணினர் பொருப்புத் தோளர்
மின்னின்ற படையுங்கண்ணும் வெயில்விரிக்கின்ற மெய்ய
ரென்னென்றார்க் கென்னென் னென்றா ரெய்திய தறிந்தி லாதார்
முன்னின்றார் முதுகுதீயப் பின்னின்றார் மூடுகு கின்றார்.

என்னும் கூ-ம் செய்யுளில், "முடுகுகின்றார்" என்பது "மூசிக்காய் வார்" எனக்காணப்படுகின்றது. முதுகுதீய என்பதற்கு இயைந்து வருதலிற் பின்னையதே பொருத்தமுடைத்து.

௸

தூளியினிமிர்படலம்போ யிமையவர் விழிதுற வெம்போர்
மீளியி னினமென வன்றாள் விரைபுலி நிரையென விண்டோ
யாளியி னணியெனவன்றே லலைகடல் விடையென வஞ்சா
வாளியின் விசைகொடு திண்கார் வரைவரு வனவென வந்தார்.

என்னும் கஅ-ம் செய்யுளில் "தூளியினிமிர்படலம் போயிமையவர் விழிதுறவெம்போர் - மீளியினினமெனவன்றாள் விரைபுலிநிரையென" என்பது "தூளியினிமிர்படலம்போய்ச்சுரர் விழிபொதுளுறவெம்போர் - மீளியர் வெகுளியொடஞ்சா விரைபுலிநிரையென" எனக் காணப்படுகின்றது. "அஞ்சா" என்பது "அன்னார்" எனவுங் காணப்படுகின்றது. "பொதுளுற" என்பதும் "மீளியர்" என்பதும் பொருட்கியைபுஞ் சிறப்புமுடைமையிற் பின்னையனவே பொருத்தமுடையன. மீளி என்பதற்குச் சிங்கம் என்றல் பொருந்தாது.

சி. கணேசையர்.

---

*

உ

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(ஙகூஅ) அவனிங்குவந்து தீர்ப்பதன்முன் நான் மாயப் பற்றி நின்று என்னை நீங்காத பாதகத்தையுடைய சூலையைப், பொருந்திய இவ்வயிற்றோடுங் கிழிப்பேனென்று உடைவாளினாலே கிழிக்க, உயிரோடும் சூலை தீர்ந்தது. மாயக் கிழிப்பேனென்று கூட்டுக.

(ஙகூகூ) நாயகரோடு சகமரணஞ் செய்தற்கு விரும்பும் பொழுது.

(சOO) நாயகருடைய செய்கையை மறைத்து, நாயகரை நம்பியாரூர் அணையும் பொழுது மிக அலங்கரித்து எதிரே போமென்று கூற, நிலை பொருந்திய வாயிலில் தீபத்தையும் பூரண கும்பத்தையும வைத்து.

(சOஉ) ஆகமத்தின் பகுதிகளையுடைய அருச்சனைகளை யெல்லாம் குணத்தில் வழாமை பொருந்திய நான்கு வேதங்களிற் றொடர்ந்த வாய்மையையுடைய நம்பியாரூரர் அங்கீகரித்துக் கொண்டு.

(சOரு) வெறுப்புப் பொருந்திய மனத்தை யுடையராய்க்குறிய உடைவாளைப்பிடிக்க, ஆளாகவுடைய சிவபெருமானுடைய திருவருளால் அவருமுய்ந்து நண்பராய்.

(சOகூ) மாற்றல் - இடல்.

(சகO) உள்ளுணர்வான ஞானம் முதலிய நான்கு பாதங்களினுண்மையைத்தெளிந்த இனிய தமிழாற் கூறுந் திருமூலநாயனருடைய பெருமையைக் கூறலுற்றேன்.

## திருமூலநாயனர் புராணம்.

(க) அந்திக்காலத்துதிக்கும் இளம்பிறையையணிந்த சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற கைலையில் முதன்மைவிளங்கும் கோயிலுக்கு

முதன்மைபொருந்திய தலைவராகி இந்திரன் விட்டுணு பிரமா முதலாம் தேவர்களுக்கு முறைமையை அருளும் திருநந்திதேவருடைய திருவருளைப்பெற்ற நான்கு வேதங்களையறிந்த யோகி ஒருவர்.

(௩) நெருங்கிய சடையிற் சிவபிரானணிந்த சுத்தமாகிய நீர் செறிந்த கங்கையினது அன்னங்கள் நிறைந்த அகன்ற நீர்த்துறையினரிய கரையின்பக்கத்தே.

(௪) நெடிய கங்கைத்துறையிலாடிப் பிறவித்துறையாகிய நெடிய கடலினின்று, ஏற்றுவிக்குஞ்சிவன் மகிழ்ந்தருளும் காசியைவணங்கித் துதித்து.

(௫) ஆடுகின்ற அரங்கையுடைய திருவாலவனத்தை வணங்கித் துதித்து.

(௬) நல்ல பதியிலிருக்கின்ற யோகசாதனையையுடைய முனிவர்களை விரும்பிப்போய் பொன்னம்பலத்தைச் சூழ்ந்த திருவீதியையுடைய அழகிய க்ஷேத்திரமாம் பெரும்பற்றப் புலியூரில் வந்தடைந்தார்.

(௮) விசாலித்த நிலைபொருந்திய மாளிகையையுடைய சிதம்பரத்திலிருந்து வணங்கிப்போய் வலிய இடபத்தின்மேல் வருகின்ற சிவபிரான் அமுதுசெய்ய அஞ்சாது நஞ்சைக்கொடுத்ததென நினைத்துப் பூமிக்கு வளத்தை நிறைத்துக்கடல்வயிற்றை நிறைவியாத காவிரியின் கரையை அணைந்தார்.

(௯) பசுவினரிய கன்றுறையுந் திருவாவடுதண்டுறையையடைந்து.

(௧௦) கரைப்புறவில் - கரையிலுள்ள புறவில்.

(௧௧) வினைப்போக நீங்க வாழ்நாளைக் கொடுந்தொழிலையுடைய ஞமனுண்ண அழிந்து பூமியில் வீழ்ந்தான்.

(௧௩) தாம் முயற்சிசெய்த பிராணவாயுவை அடக்குதல் வழியாகத் தம்முயிரை யவனுடம்பிற் பாயும்படிசெய்தார்.

(௧௪) விரைந்து - விரையாய்.

(கரு) பூக்கள்விரிந்த குளிர்ந்த முல்லையினீழலிலினிதாகக்காத் தார். புறங்காத்தல் ஒருசொன்னீர்மைத் தாய்க்காத்தலை யுணர்த் திற்று.

(கஎ) சூரியனஸ்தமித்த பின்னருந்தாழ்த்தாரென்று பொருந் திய அச்சத்தோடுபோய்.

(உஉ) தெரிந்த காப்பிடத்தில் வைத்தபழைய உடற்பொறை யைக்காணூர்.

(உங) குளிர்ந்த சந்திரனையணிந்த சடையையுடைய சிவபி ரான் தாந்தந்த ஆகமத்தின் பொருளைப்பூமியில் திருமூலருடைய வா க்கால் தமிழாய்வகுப்ப நினைத்த அத்திருவருளால் அச்சரீரத்தை மறைப்பிக்க அளவிறந்த அறிவையுடைய திருமூலர் சிவனருளென நினைந்தார்.

(உச) சூழ்ந்த அந்தக்குலத்துள்ளவர்களாய்த் தொடர்ந்தவர் களுக்குத் தொடர்பின்மையை முழுதுங்கூறியருள அவர் திரும்பிப் போனதற்பின், மிக்கவிருப்பத்தையும் கோபத்தையும் வேரோடுகளை ந்த திருமூலரானவர்.

(உரு) மேலைத்திசையில் மிகஉயர்ந்த அரசின்கீழ் யோகாசன மாயிருந்தருளிச் சிவயோகத்தில்நின்று இருதயகமலத்திலே உள்ள சிவத்தோடுகலந்திருந்தார்.

(உசா) தசையையுடைய உடம்பில் பிறவியாகிய விடமானது தீ ர்ந்துலகமுய்ய ஞானமுதலாகிய நான்கு பாதங்களுமலர்ந்தநல்ல திரு மந்திர மாலையை.

## தண்டியடிகணுயனூர் புராணம்.

(க) சிவனுடைய மறைபாட ஆடுகின்ற மாற்றுயர்ந்தபொன் போன்ற பாதங்களை மனத்துக்கொண்டகருத்தின் கண்ணேக்கும் குறிப்பேயன்றிப் புறக்கண்ணாலும் விஷயத்திற்கண்ட உணர்வுதுறந் தார்போலப் பிறந்தபொழுதே கண்குருடர். அகநோக்காற்பாதமே யன்றி ஏனையவற்றை நோக்காதவாறுபோலப்புறநோக்காலும் நோக் கும் விடயங்களை நீங்கினவர்போலக் கண்காணுதவர்.

(ரு) குளத்தினடுவே குறியை நட்டுக்கட்டுங் கயிற்றைக்குளக் கரையின் இறக்கமான இடத்தே நடுதறியோடு இசையக்கட்டி இடையே தடவி.

## மூர்க்கநாயனார் புராணம்.

(க) அரங்கிற் பெண்களும் புடவைக்கொடிகளும் விழவிற்காக ஆடும்.

## சிறப்புலிநாயனார் புராணம்.

(க) காவிரிநாட்டிலே பெருமைமிகும் அழகிய பதியாதென்னில், பூமியிலுள்ளோரில் இன்மையினாலே இரந்து சென்றோர்க்கு இல்லைஎன்னுமலீயும் தன்மையராகிய என்றும், நன்மையேமிக்க வேதியரைச் சீகாழித்தலைவர் அருளிச்செய்த மறைத்திருவாக்குப்பரந்த திருவாக்கூராம்.

(உ) கரியமுகில்முழக்கந் தாழ வேதவொலி முழக்கமிகும், பொலிவு மலிந்த வீதியிலிட்ட அகிற்புகைத்தூபம் தாழ நல்யாகசாலையிலுள்ள ஓம ஆகுதித்தூபம் உயரும்.

(ங) கரும்பைச்சூழ்ந்த கமுகவேலியையுடைய.

## சிறுத்தொண்டநாயனார் புராணம்

(க) உருவைக்காட்டுஞ்செயலை மன்மதனொழியக்கண்பொழிகின்ற சிவந்த அக்கினிவருகின்ற நாட்டம் பொருந்திய அழகிய நெற்றியையுடைய சிவபிரான் மகிழ்ந்தருளும் பதியாதெனில், கரியகண்களையுடைய கடைசிப்பெண்கள் வயல்களிலே தங்களிப்பைக் காட்டுகின்ற காவிரிநதிசூழ்ந்த திருநாட்டில் வளத்தைக்காட்டுந் திருச்செங்காட்டங்குடியாம்.

(உ) நெடியசடையையுடைய சிவபெருமானது விபூதியினடைவால் உலகத்தில் வளர்கின்ற உயிர்களுக்கெல்லாம் உயர்ந்த காவற்றொழிலைப் பூண்டு. உயிர்காவற்றொழிலென்றது வைத்தியத்தொழிலை.

(ச) பள்ளத்திற்கு நீர்பாயும்படி வைத்தமடையாய்.

(ரு) அரசனுக்காகப் படையெடுத்துப்போய் வடதிசையிலுள்ள வாதாவி யென்கின்ற பழையநகரந்துகளாக, பகடு - யானை.

(௯) விருத்தி - சருவமானியம்.

(௧0) நம்முடைய மனக்கருத்துக்கினிதாக இசைந்துகொண்டு உம்முடைய நிலைமையை அறியாமை உய்த்தீர், சரித்தல் - ஒழுகல்.

(௧௨) வேதங்களுக்குக் காரணராகிய சிவபெருமானது அடியார் வேண்டியமெய்த்திருத்தொண்டைச் செய்யக்குற்றமற்ற குடியிற்பிறந்த திருவெண்காட்டு நங்கை என்னும் விருப்பத்தையுடைய மனைவியாருடைய கருத்தொருமிக்கவரும்பெருமையையுடைய. செய்ய ஒன்றவரும் எனமுடிக்க.

(௧௪) திருவமுது - அன்னம். பாய்தயிர் - தோய்தயிர். உண்ணீரமுதம் - உண்கின்ற நீராகிய அமுதம்.

(௧௫) வழிபாட்டால் மேன்மைபொருந்திய பரஞ்சோதியார் அவ்வடியார்முன் மிகச்சிறியராயடைந்தார்.

(௧௭) தவத்தையுடைய பரஞ்சோதியார்க்கு மிகுந்த அழகிய மனையறத்தின் மூலமாய்.

(௧௮) அருமையோடேகபுத்திரர் பிறந்தபொழுது அலங்கரிக்கப்பட்ட பெருமையோடு சுற்றங்களிப்பப்பெறுதற்கரிய புதல்வனைப் பெற்றுவருகின்ற மகிழ்ச்சி தாதையாருடைய மனத்திலே அடங்காவண்ணம் வளர அழகுமலிந்த நெய்யாடல் விழாவைச் செங்காட்டங்குடியிலுள்ளோரெடுப்ப. மணி என்ற நீண்டுப்புதல்வனை.

(௧௯) நல்ல மங்கலவாத்தியம் முழக்கப்பட, வேதகோஷம் ஆகாயத்தை அளக்கக்காப்பிட்டார்கள்.

(௨௧) சுருள்மயிர் பொருந்திய நுதலிற்சுட்டி, இருகாதுகளினும் இரத்தினக்குதம்பை பொருந்திய திருக்கண்டத்தில் நாண்.

(௨௯) இதழ்கொண்ட கொன்றைமாலையை முடித்த நெடிய சடையை அழகுபொருந்தக்கடலைப் பருகி முகந்தெழுந்த கரியமேகச் சுருள்போலத் தொடர்ந்த புறமயிர்சுருண்டு இருண்டுபற்றைபோலாய் நெறித்து அசைந்து நெருங்கிப்படர்கின்ற சாய்தலையுடையகுழற்சிபொருந்திய குஞ்சியாகப்பரப்பி. சடையைப்பரப்பி எனமுடிக்க.

(௨எ) கருமைக்குக் கருமைசெய்தாற்போன்ற அழகு விளங்குகின்ற பம்பையினது சாய்தலினுனியிற்பரப்பும் ஈறியதும்பைமலரானவை முகிலினிடையிடையே யெழுந்த நக்ஷத்திரப்பரப்பைப் போலத்திரளான நிரையையுடையவண்டுகள் பரந்தாரவாரிக்கும்படி தோன்ற.

(௨அ) பக்கத்தே திருமுடியிற்செருகு மந்திக்காலத்திளம்பிறையைச் சிறிய வடிவத்தையுடைய பூரணசந்திரனுக்கித் திரும்பவுஞ் சாத்தியதுபோல.

(௨௯) கொடிய சூரியமண்டலமும் விளங்குகின்ற சந்திரமண்டலமும் அந்த அக்கினிமண்டலமும் உடனணைந்தவாறுபோல அழகை வவ்வுதிருக்காதில் சங்குமணிக்குழையைவளைத்து அதினுள்ளே செவ்வரத்தமலரைச் செறித்த திருத்தோடு பக்கத்தேசிறக்க.

(௩0) கருமைபொருந்திய நஞ்சைசமறைத்தருளக் கடலிலுள்ள அமுதக்குழி நிரையாகிய அசைகின்ற ஒளியையுடைய வெண்டிரட் கோவையையுடைய அழகிய வடமணிந்தாற்போல.

(௩௧) சூரியன் கடலிற் குளித்தபின் உண்டாகின்ற செவ்வொளியை அந்திக்காலத்துப்பரம்பும் நெருங்கிய இருட்பொழுதுபடர்ந்து அணைந்து சூழ்வதுபோலத் தம்முடைய பழைய யானைத்தோலைக் கொண்டு அமைத்துச்சாத்தும் பவளத்திருமேனியில் நீலநிறச்சட்டையினணி விளங்க.

(௩௨) மிக்கெழுகின்ற அன்பர்களது அன்புதிருமேனியில் விளைந்ததென்ன எலும்புமணியால்.

(௩௩) பேரருளின் நிறத்தைக்கண்டு சிவனுடைய அருளையே பேணும் அடியார்களே வருகின்ற அன்பின்வழிநிற்பீரென்று.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

# முகவுரை.

---

## மூவகை யான்மாக்களிலக்கணம்.

இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குக் கிடைத்த திருவாவடுதுறையாதீன வேட்டுப்பிரதியிலுந் தருமபுரவாதீன வேட்டுப்பிரதியிலுமிருந்தது; இதனை யுற்றுநோக்கும்போதுள்ள விஷயங்களெல்லாஞ் சிவஞானசித்தியார் எட்டாஞ்சூத்திரமிரண்டாங்கவிக்குவரைந்த மறைஞான தேசிகருரையினுஞ் சிவாக்கிரயோகிகளுரையினுஞ் சித்தாந்தப் பிரகாசிகை முதலியவற்றினுங் காணப்பட்டது. எழுதுவோராலே நேர்ந்த வழுக்கள் பலவாயிருக்தன. அவைகளைச் சிற்றறிவிற்கியன்றவாறு பிரதிகளைத்தழுவித் திருத்தஞ்செய்து, யாழ்ப்பாணம் புலோலி ஸ்ரீமத் தில்லைநாதநாவலரவர்களிடத்திலும் வாசித்தியன்றவரை திருத்தஞ்செய்துகொண்டு, தமிழ்ச்சங்கத் தக்கிராசனாதிபதியாகிய பாலவனத்தம் ஜமீந்தார் மகாகனந்தங்கிய பொ. பாண்டித்துரைச்சாமித்தேவரவர்களுக்குத் தெரிவிக்க அவர்களும் பார்வையிட்டியன்றவரை திருத்தஞ்செய்து முன் நான்காம்வருடத்துச்செந்தமிழ்ப் பத்திரிகையிற் பொதுவாக வுயிரிலக்கணம்வரைந்துவெளியிட்டிருப்பதற்கியைய அவ்வுயிர்களின் வகையிலக்கணமும் வெளியிட வேண்டுவது கற்போர்க்குப் பேருபகாரந்தானென்றார்கள்; அதனாலிச் செந்தமிழ் வாயிலாக வெளியிடலாயிற்று.

இங்ஙனம்,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற் பரிசோதகர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

உ

திருச்சிற்றம்பலம்.

# மூவகை யான்மாக்களிலக்கணம்.

அநாதியாயுள்ள ஆன்மாக்கள் எண்ணுதற் கருமையவாயினும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னு மூவகையுளடங்கும்.

இவர்களில் விஞ்ஞானகலர் பக்குவரென்றும், அபக்குவரென்றுமிருவகையினராவர். அவருள் பக்குவர் பரமுத்தரென்றும், அபரமுத்தரென்று மிருவகையினராவர். இவர்களுள் பரமுத்தருக்குச் சிவன் நிராதாரமாகவுயிர்க்குயிராய் நின்று மலத்தையடர்த்துத் திருவருளைக்கொடுப்பன்; அப்பொழுது பரமுத்தியையடைவார்கள். அபரமுத்தர் சிவனநுக்கிரகித்தும் மலபரிபாக மந்ததையினாலே அதிகாரமலத்துடனே கூடி அதிகாரத்தைப் பண்ணுவார்கள். அவர்களாரெனில்; அணுசதாசிவர், அட்டவித்தியேசுரர், சத்தகோடிமகாமந்திரர்கள். இவர்களுக்குத் தத்தநுகரண புவனபோகங்களெல்லாஞ்சுத்தமாயையிலேயுண்டாம்.

இவர்களில் அணுசதாசிவர் சிவாநுக்கிரகத்தாற் சாதாக்கிய தத்துவத்திலிருந்து சுத்தமாயாபுவனத்திற் பக்குவர்க்கநுக்கிரகத்தைப் பண்ணுவர். அட்டவித்தியேசுரர் ஈசுரதத்துவத்திலிருந்து அசுத்தமாயாகிருத்தியம் பண்ணுவர். சத்தகோடி மகாமந்திரர்களில் மூன்றரைக்கோடியர் சுத்தவித்தையிலிருந்து பிரகிருதியிற் பக்குவான்மாக்களுக்குக் குருவையதிட்டித்துச் சிவனநுக்கிரகித்துமிடத்துக் காரண காரணமாயிருந்து மகாப்பிரளயத்தே முத்தியையடைவார்கள். மற்றை மூன்றரைக்கோடிபேரும் முன்சொல்லப்பட்டவர்களுடனே சிவனாலே அநுக்கிரகம்பெற்று பிரபஞ்ச சிருஷ்டி முடிந்தவுடனே முத்தியையடைவரெனவறிக.

இனி அபக்குவர்கள் கேவலிகளாய் மலத்திலழுந்தி மலபரிபாகம் வருமளவுமிப்படியே கிடப்பார்கள்.*

---

* இவர்களுக்கு விஞ்ஞானகலத்துவம் வருகிறதெங்ஙனமெனில், ஆசாரியனாற்றீக்கையிற் கலாதத்துவமளவாகக் கன்மங்களைச் சோதிக்கப்படுகையாலும், மாயையினதும் ஆன்மாவினதும் வியாபாரங்களைப்பிரித்தறிகின்ற ஞானத்தினாலும், ஆதாரயோகதியானதியாலும், மிகுந்த தவத்தினுடைய சித்தியினாலுங், கன்மாநுகுணமாகத் தநுவையெடுத்துக்கன்மங்கள் புசித்துத்தொலைந்த காலத்தாலும், வைராக்கியத்தாலுஞ், சந்நியாசாநுட்டானத்தாலும், எல்லாக்கன்மங்களும் நசிக்க அவைகட்காதீனமாயிருக்கிற மாயையுமின்றி யாணவமலமொன்றுஞ் சேட்டித்து நிற்கையினாலுமுண்டாவதெனவறிக. எனவும் பாடம்.

*

இனிப்பிரளயாகலரும் பக்குவர் அபக்குவரென இருவகையினராவர். அவருட்பக்குவர் பரமுத்தரென்றும், அபரமுத்தரென்று மிருவகையினர். இவர்களுள் சிருஷ்டிகாலத்திலே சிவனநுக்கிரகித்தவுடனே பரமுத்தர் முத்தியடைவார்கள். அபரமுத்தர் மலபரிபாகமந்ததையினாலே அதிகாரங்களிலிருப்பர்கள். அவர்களாரெனில், மாயாகர்ப்பாதிகாரிகளாகக் கலாதத்துவத்தின்மேலேயிருக்கிற மண்டலேசராகிய வுருத்திரரெண்மர், குணதத்துவத்தின் மேலேயிருக்கிற குரோதராதியெண்மர், குணதத்துவத்திற்குள்ளே பிரகிருதிதத்துவங்களிருபத்து நான்கிற்கும் அதிபதியாகிய ஸ்ரீகண்டருத்திரரொருவர், பிரமர் முதலாயினார்க்குத் தலைவராய்ப் பிரமாண்டத்துக்குப் புறம்பே பத்துத்திக்கிலுந் திக்குக்குப் பத்துப்பேராய், இந்திராதி திக்குபாலகர் பதின்மரையும் அதிட்டிக்கிறவர்களாய், பிரமாண்டதாரகராயிருக்கிற கபாலீசர்முதலிய உருத்திரர் நூற்றுவர், இந்நூறுருத்திரர்களையும் அதிட்டிக்கிற வீரபத்திரர் ஒருவர் ஆக நூற்றுப்பதினெண்மராம். *

இவர்கள் பிரகிருதிமாயா மத்தியிலே அதிகாரம் பண்ணுகிறவர்களாய், அனந்தேசுரராலே பிரகிருதிக்குக்கீழே கிருத்தியங்களைப் பண்ணிக்கொண்டு அபரமந்திரேசுரரென்னும் பெயருடையராய் இருப்பார்கள். இவர்கள் கலாதிகளுடனே கூடியிருந்தும் அவைகள் இவர்களை வாதியாமலிருக்கிறதெவ்வாறெனில், பாம்பின்கழுத்திலே விடமிருந்தாலும் அஃது அதனைவாதியாததுபோலவென்க. அதுபோலவே இவர்களுங் கலாதியைத் தங்கள்வசமாகப்பண்ணிக்கொண்டிருப்பார்கள். இவர்களுக்குப் பிரளயாகலத்துவம் வருகிறதெவ்வா

---

* இந்நூற்றுப்பதினெண்மரின் வகையைக் காஞ்சிப்புராணம், திருமேற்றளிப்படலம், ௩-ஆவது செய்யுளில்,

"அண்டங்காத்தமருருத்திரர் நூற்றுவருட்சீ
கண்டன்வீரன்குரோதனே முதற்கருதெண்மர்
மண்டலத்திறை யோரிருநால்வரும்வழுத்திப்
பண்டுபூசனை புரிந்திடப்பட்ட வத்தளிகள்."

எனக்கூறியதினாலுங்காண்க.

றெனில், * சாங்கியஞானத்தாலும், பிரளயகாலத்திற் கலையகன்றதி ஞலும் வருமெனவறிக. †

இனி அபக்குவராவர், சாங்கியஞானமுமற்றுப் பிரளயகாலத்தி லே கலையகன்று சிருட்டிகாலம் வருமளவும் மலத்துடனே கேவலிக ளாய்க் கிடந்து, சிருட்டிகாலம் வந்தவுடனே கன்மத்துக்கீடாகவரப் பட்ட தூல சூக்கும சரீரங்களைப்பெற்றுப் புவனங்கடோறுஞ் சஞ் சரிக்கிறவர்களாம்.

இனிச்சகலராவார்:— கலாபந்தத்தையுடையவர்கள். இவர்களு க்குச்சகலத்துவம் வருகிறதெவ்வாறெனில், ஆணவமுதலிய மூன்று பாசத்துடன்கூடி, ஆணவத்தாற்றடுக்கப்பட்ட ஞானக்கிரியைகளை யுடையராய், மாயையினாலே மோகித்து, நானாவிதமான கன்மங்களை யும் புசித்து, அவற்றைப்புசிக்கிறகாலத்தி லாகாமியமேறிச் சஞ்சித மாகக்கட்டுப்பட அதனையும் புசித்துத்தொலைக்கை காரணமாகப் ‡புரியட்டகரூபராய்ப் பிராகிருதமானவடிவையெடுத்து அதனாலுண் டான போகங்களைப்புசிக்கிறதினாலாமெனவறிக.

இவர்களும் ¶ மூன்றுபேதத்தராவர். அவரிற்பக்குவருக்குச் சிவன் ஆசாரியமூர்த்தியை அதிட்டித்து $ எழுவகைத்தீக்ஷையினா லும் பாசமோசனம் பண்ணுவன். அவ்வெழுவகையாவன. நயன தீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, பாவனாதீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை, ஔத்திரிதீக்ஷை என்பனவாம்.

---

* சாங்கியஞானமாவது, பிரகிருதியையும் புருடனையும் பகுத்தறியும்
விவேகஞானத்தால் அவித்தை நீங்கவே முத்தியென்பது.
† ஆசாரியமூற் றீக்கிதரான சகலர் பிரகிருதியையுமான்மாவையுமுள்ள
படியறிந்த ஞானத்தினாலே அந்தப்பிரகிருதியினின்று நீங்கினவராய்ச் சிரு
ட்டிகாலத்திற் பிராகிருததேகத்தை யெடாமல் மாயாசரீரத்தைப்பொருந்தி
அச்சரீரத்திலுண்டான கன்மபலங்களை அந்தப்புவனங்களிற் புசித்துத் தீக்
கையாற் குணதத்துவத்திற்கு மேலுண்டான கன்மமுமாணவமுமாகியவிர
ண்டுடன் கூடியிருத்தலால் வருவதெனவறிக. என்றும் பாடம்.
‡ புரியட்டகரூபம் - சூக்குமசரீரம்.
¶ மூன்றுபேதம்—அதிபக்குவம், மந்தபக்குவம், அபக்குவம்.
$ எழுவகைத்தீக்ஷையாவன:— "பலவிதமாசான்பாச மோசனந்தான்
பண்ணும் படிநயனத்தருள் பரிசம் வாசகமானதமுமலகில்சாத்திரம் யோக
மௌத்திராதியநேகமுளவவற்றினௌத்திரியிரண்டுதிறனும்." எனச்சிவஞா
ன சித்தியாரிற் கூறியதுங்காண்க.

அவற்றுள் நயனதீக்ஷையாவது:— ஞானக்கண்ணாலே பார்த்து ஆறத்துவாக்களிற்கட்டுண்டிருக்கிற கன்மங்களைக்கெடுத்துச் சந்திரனைப்பற்றிய இராகு வினீக்கம்போல மலப்பற்று நீங்கச்செய்வது. பரிசதீக்ஷையாவது:— பஞ்சப்பிரம சடங்கங்களையும், பஞ்சாக்கரத்தையும் வலக்கையினாலே நியாசம் பண்ணிச்சோதிமயமாகப் பண்ணுவது. வாசகதீக்ஷையாவது:—பஞ்சாக்கரப்பொருளாயிருக்கிற திரிபதார்த்தங்களையும் விளங்க வுபதேசிப்பது. பாவனாதீக்ஷையாவது:—மனோபாவனையால் ஞானானந்தராகவைப்பது. சாஸ்திரதீக்ஷையாவது:— ஐயந்திரிப ஞானநூலாற்கேட்டல் சிந்தித்தல் தெளிதலை யுண்டாக்குவது. யோகதீக்ஷையாவது:— அட்டாங்கயோகங்களினாலுங் கருவிவசத்திற் செல்லாமல் ஞானநிட்டையுண்டாக்குவது. ஔத்திரிதீக்ஷை:-கிரியைஞானமென இருவகைப்படும்; அவற்றுள் கிரியையாவது:—குண்டமண்டலாதிகளிட்டுச்செய்வது. ஞானமாவது:— அக்குண்டமண்டலமுதலான கிரியைகளை மனோபாவனையாற்செய்வது. இவற்றின்விரிவைச் சிவஞானசித்தியார் முதலிய நூல்களினும், ஆகமங்களினுங்காண்க.

இனி, முற்கூறிய விஞ்ஞானகலர் அபக்குவர், பக்குவர் என்னுமிருவகையில், அபக்குவம்—ஆமம். அவை நென்முதலிய தானியங்கள். பக்குவம் - புசிக்கப்படுவன. அவை சோறுகறிமுதலானவைகள். இத்தன்மைபோல ஆன்மாக்கள் சஞ்சாரத்துக்குக் காரணமாகிய மலமும் பக்குவமெனவும், அபக்குவமெனவு மிருவகைப்படும். ஆதலால் அவ்விஞ்ஞானகலரும் பக்குவமலரும் அபக்குவமலருமென இருவகையாயினரென்க. இவருள் பக்குவமலர் மலபரிபாகமிகுதியாற் சிவனாலே அநுக்கிரகம்பெற்றுச் சாயுச்சியத்தையடைபவர். அபக்குவமலர், மலபரிபாக மந்ததையாலே சிவன் அவர்களுடைய ஞானக்கிரியைகளை விளக்கி அநுக்கிரகஞ்செய்யப்பட்டிருக்கும்போதுஞ் சுத்தாத்துவாவுக்கதிகாரிகளாகையால் அதிகாரமலத்தைப்பொருந்தியிருப்பவர்கள். இந்த அபரமுத்திபெற்றவர்களியாவரெனில், உத்தமராகிய பிரணவர், சுதாக்கியர், சிவர், தீர்த்தர், காரணர், சுசீவர், சூக்குமர், காலர், தேசசர், அம்சு எனக்கூறிய அணுசதாசிவர் பதின்மரும், அதோமாயா புவனத்துள்ளார்க்குப்பக்குவம் வந்தவிடத்து அநுக்கிரகஞ்செய்து சாதாக்கியதத்துவமாகிய சதாசிவதத்

துவத்திற் போகங்களைப்புசித்து அச்சதாசிவ மூர்த்தியைச்சூழச் சேவித்துக்கொண்டிருப்பர்கள். இவர்களுக்கு அந்தத்தத்துவபோகத்தில் வைராக்கியம்பிறந்தால் அப்பொழுது சிவன் பிரசன்னராகி யநுக்கிரகஞ்செய்யச் சிவபதத்தையடைவர்கள்.

இனிமத்திமராகிய அட்டவித்தியேசுரராவார் யாவரெனில், அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டி, ஸ்ரீகண்டர். இவ்வெண்மரும் ஈசுரதத்துவத்திலிருக்கும் மகேசுரனைச் சூழ்ந்திருந்து மாயையிற் கீழுண்டாகிய சிருட்டியாதி கிருத்தியங்களைச் சிவனேவலாற் செய்வர்கள்.

ஆனாலிவர்களெண்மருந்தம்மிலொத்திருப்பரோவெனில், முந்திய அநந்ததேவநாயனார்க்கு அதிகாரத்தில் வைராக்கியம்பிறந்தால் அவரைச் சிவன் சங்காரகாலத்திலே மோக்ஷத்தையடைவிப்பன். அதன்பின் அவர்க்கடுத்த சூக்குமர் அவ்வதிகாரத்தைப்பெற்றுக் கிருத்தியங்களை அவரைப்போலச் செய்வர். மற்றவர்களுமிவ்வாறடைவே அதிகாரத்தைப்பண்ணுவர்கள். ஆதலாற்றம்மிலொவ்வாரென்க. எல்லார்க்கும் பிந்திய ஸ்ரீகண்டருடையபதம் பாழ்கிடவாமற்சிவன் விஞ்ஞானகலராதற்குப் பக்குவமுண்டானவர்களிலொருவரையடைவே யெண்மரிற் குறையாமற் கூட்டுவன். இதற்குமேற்கோள் ரௌரவம், மதங்கம், பௌட்கரம், சர்வஞ்ஞானோத்தரம், வாயவ்வியம், சுவச்சந்தம், இரத்தினத்திரய மென்பவைகளிலறிக.

இனி அதமராகிய சத்தகோடிமகாமந்திரர்களிலே மூன்றரைக்கோடிபெயரை மலபரிபாகமிகுதியாலே கீழுள்ள கிருத்தியங்களிலும் மேலுள்ள போகத்திலும் வைராக்கியம்பிறந்து வெறுப்புண்டாகையால், விஞ்ஞானகலர் விஷயமாகவும், * மாயாகர்ப்பாதிகாரிகள் விஷயமாகவுஞ், சிவன் † நிரதிகரணமாகத் தீக்ஷைபண்ணுதற்குக்காரணமாகப்பண்ணி, அவர்களை மகாப்பிரளயத்திலே முத்தியையடைவிப்பன்.

---

* மாயாகர்ப்பாதிகாரிகள்—கலாமத்தகத்திலிருக்கு மண்டலேசர்முதலிய வுருத்திரர்கள்; மாயை—ஈண்டுப்பிரகிருதி மாயையென்க.

† நிரதிகரணம்—ஆதாரமில்லாமை.

மற்றைமூன்றரைக்கோடிபெயரையுஞ் சிவன் அதோமாயையிலு திக்குந் தூலகாரியங்களுக்குக்கர்த்தாவாக்கிச், சுத்தவித்தையிலுண் டான போகங்களைப்புசிப்பித்துத், திதிகாலத்திற் சகலர்நிமித்தமாக வாசாரியராகவதிட்டித்துக் கொண்டநுக்கிரகஞ்செய்புங்கன்மத்துக் குக்காரணபூதராகவிருக்கச்செய்து மகாப்பிரளயத்திலே முத்தியை யடைவிப்பன்.

முற்கூறிய அபக்குவரான விஞ்ஞானகேவலிகளாவார் யாவரெனில்,

ஆணவமிகுதியா லளவற்ற ஆன்மாக்கள் ஞானக்கிரியைகள் மிகவு மறைப்புண்டு மலபரிபாகம் வருமளவுஞ் சுத்தவித்தைக்குக் கீழாக அசுத்தமாயைக்குமேலாக நடுவேநெடுங்காலங் கேவலத்தைப்பொருந் திக்கிடக்கையால், முத்தான்மாக்களெனப்பெறுமல் விஞ்ஞானகேவ லிகளெனப் பெயர்பெற்றிருப்பவர்கள். ஆதலால் விஞ்ஞானகலர்நால் வகையரெனவறிக. இதற்குமேற்கோள் காமிகத்து மிருகேந்திரத்து மறிக.

முற்கூறிய பிரளயாகலர் பக்குவமலர் அபக்குவமலரென விரு வகையரில், பக்குவமலர்க்கநுக்கிரகஞ்செய்யுமுறை யெவ்வாறெனில், மலபரிபாகமிகுதியாலே சிலர்க்கு எல்லாக்கன்மமும் பக்குவமாயுள்ள வளவிற் சிவன் தீவிரந்தீவிரதரமென்னுஞ் சத்தியைப்பதித்து * நிரதிகாரதீக்ஷையாற் றிருக்கண்சாத்தி அவர்கள் பாசத்தைச்சேதித் து ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பித்து மோக்ஷத்தையடைவிப்பன்.

மற்றையபக்குவரைக் கன்மாநுகுணமாகப் போகத்தைப்புசித் துத் தொலைக்கையின்பொருட்டுப்புரியட்டகதேகத்துடன் பௌஞ்ச தேகமாகிய யோனிகடோறும் பிறந்துழன்று திரிந்து மலகன்மங்கள் பரிபாகமானவாறே சிவன்சத்தியைப்பதித்து அவர்களறிவைவிளக்கி மோக்ஷத்தையடைவிப்பன். புரியட்டகத்துடனே கூடினவர்களுட் சிலரை அனந்ததேவநாயனர் அப்புதத்துவத்தில் அமரேசமாதியா கிய புவனங்களிலிருக்குங் குய்யாட்டகராகிய வெண்மர்க்குந், தே யுவில் அரிச்சந்திராதி புவனங்களிலிருக்கும் அதிகுய்யாட்டகர்க்கும், வாயுவில் தெயையாதியாகிய குய்யாத்குய்யாட்டகர்க்கும், ஆகாசத்தில் வத்திரபதாதிபாகிய பவித்திராட்டகர்க்கும், அகங்காரத்திற் சகலா ண்டாதியாகிய தாணுவட்டகர்க்கும் ஆகப்புவனாதிபர்களுற் பதின்ம ருக்கும் அடைவே அதிபராக்கி † யோசியாநிற்பர்.

---

*நிரதிகாரம்:- அதிகாரத்தொடு சம்பந்தமின்மை. †யோசித்தல்- கூட்டுதல்.

இதற்குமேற்கோள் - விசுவத்தும், மிருகேந்திரத்துங், கிரணத்துமறிக.

முற்கூறிய சகலராவார் யாவரெனில், தேவர்களிருடிகள் மானிடர் முதலாயினோரெனவறிக. அவர்கள் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவரெனமூவகையாவர். அதிபக்குவராகிய தேவர் தானவர் முதலாயினோரைச் சிவன் தீக்ஷையால் மந்ததரமுதலிய நால்வகைச் சத்தியைப் பதித்துத், திவ்யமான திருமேனியை யதிட்டித்துக்கொண்டு, அவர்கள் பாசத்தைச்சேதித்து, ஞானக்கிரியைகளை விளக்கித், திதிகாலமுடியுமளவும் சுத்தாத்துவாவிற் போகங்களைப்புசிப்பித்து, மகாசங்காரத்தில் மோக்ஷத்தையடைவிப்பன். தேவர் முதலென்பதனால் எ..ம்பீருகவெனவறிக. சிவன் மந்தபக்குவராயுள்ள * வைநயிகர்கள் முதலாயினோரை மந்ததரம் மந்தமென்று சொல்லப்பட்ட சத்தியைப்பதித்து, ஆசாரியனையதிட்டித்து, அவர்க்கநுகுணமான தீக்ஷையைச் செய்து, அவர்கள் யாதொருபதத்திலேயிருந்து போகம்புசிக்க விரும்பினார்களோ அந்தப்பதத்திலே அவர்களையோசியாநிற்பன்.

மலபரிபாகம்வாராத அபக்குவரை அவர் செய்தகன்மத்துக்கீடாகப் புவனசரீரத்தை யெடுப்பித்துப் போகங்களைப் புசித்துத்தொலைத்தவாறே மலபரிபாகம் பிறப்பித்து, ஆசாரியராற் றீக்ஷையைப் பண்ணி மோக்ஷத்..தயடைவிப்பன். இதற்குமேற்கோள் காமியங்கிருகப்படலத்தும், சூக்குமத்துஞ், சுவாயம்புவத்தும், மிருகேந்திரத்துஞ், சிந்திய விசுவத்துமறிக.

> "விஞ்ஞானர் நால்வருமெய்ப் பிரளயாகலக்
> தஞ்ஞானர் மூவருந்தங்கு சகலத்தி
> னஞ்ஞானர் மூவருமாகப் † பதின்மராம்
> விஞ்ஞான ராதியர் வேற்றுமைதானே."

என்னுந் திருமந்திரத் திருவித்தத்தானும் மூவரையுந் தொகுத்துப் பதின்மரெனவறிக.

மூவகையான்மாக்களிலக்கணம்

முற்றிற்று.

---

* வைநயிகர்—விநயசீலர்.

† பதின்மராவார்—விஞ்ஞானகலரில் அபரமுத்தர் மூவகையினர், அபக்குவரிற் கேவலிகளொருவகையினர், ஆக நால்வர். பிரளயர்கலரிற் பரமுத்தர், அபரமுத்தர், அபக்குவர் ஆகமூவர். சகலரில் அதிபக்குவர், மந்தபக்குவர், அபக்குவர் ஆக மூவர், எனக்காண்க.

# புத்தகக் குறிப்பு.

லண்டன், பிரிட்டிஷ்மியூஸிம் லைபிரெரி தமிழ்ப்புஸ்தககாட்டலாக்:—(A Catalogue of the Tamil Books in the Library of the British Museum.) இப்பெயர்வாய்ந்த புஸ்தகமொன்று, பிரிடிஷ் மியூஸியம் லைபிரேரியன் L. D. பார்னெட் துரையவர்களால்(M.A.) இச்சங்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுகாறும் வெளியிடப்பட்ட நூல்களின் ஆசிரியர், பதிப்பாளர்முதலியோரை அகராதிப்படவைத்து அவ்வவர் வெளியிட்ட நூல்கள் குறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சிறந்த புஸ்தகங்கள் இத்தனை வெளிவந்திருக்கின்றனவென்பதை, மற்றை விவரங்களுடன் இதனிடைக்காணலாம். நம் நாட்டுப்பிரசுரங்கள் எவையேனும், இப்பெரும் புத்தகசாலைக்கு ஒரு பிரதி சேரவேண்டுமென்பது ராஜாங்கததாரது கட்டளையென்பதைப் பலரும் அறிவர். இப்புத்தகத்தின் முகவுரையில், துரையவர்கள் தமிழ்ப்பாஷையையும் அதனிடை விளங்கும் சிறந்த நூல்களையும்பற்றி ஆராய்ந்து எழுதியிருப்பது, அவரது தமிழ் ஞானத்தின் உயர்வைப் புலப்படுத்துகின்றது. சிற்சிலவிடங்களில் தவறுகள் காணக்கூடுமாயினும், இப்புஸ்தகமமைந்துள்ள சிறந்தமாதிரியை நோக்கும்போது அவையொருபொருட்டாகா. துரையவர்கள் நம்சங்கத்தை அபிமானித்துத்தாம் வெளியிட்ட புத்தகப்பிரதியொன்றனுப்பியதற்கு இச்சங்கத்தார் நன்றிகூறுகின்றார்கள்.

மற்றும் எமது பார்வைக்குவந்த நூல்களாவன:—

(1) ஆரியமத உபாக்கியானம்:—திருநெல்வேலி, ஸ்ரீமாந்-எ. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களியற்றியது. புஸ்தகம்கிடைக்கும் விலாசம்: ஜனரல்ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. விலை அணா 2.

(2) ஸர் வால்ட் ஸ்காட் இயற்றிய ஐவன்ஹோ சாரசங்கிரகம். ஸ்ரீ-S. பஞ்சாபகேச சர்மா B. A., அவர்களியற்றியது. விலாசம்:— ஸ்ரீ-V. ராஜகோபால ஐயங்காரவர்கள், தமிழ்ப் பண்டிதர், N. H. S. No. 24. ஐயங்கார் தெரு, கும்பகோணம். விலை அணா ஆறு.

(3) கண்ணம்மாள் அல்லது பஞ்சாயத்து நாடகம்:—உ. வே. திரு, ஸா. இராகவாசாரியாரவர்கள் இயற்றியது. விலாசம்: R. நடேசையர், ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகபட்டணம். விலை அணா 6.

(4) மனம்போல வாழ்வு:—ஸ்ரீ-வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களியற்றியது. விலாசம்: ஸ்வாமி வள்ளிநாயகம், 1, மெக்லீன் தெரு, மதுராஸ், E. விலை அணா 8.

(5) ராஜம் அய்யர் சரிதை:—ஸ்ரீ-எ. எஸ். கஸ்தூரி ரங்கய்யர், B. A., L. T., அவர்கள் செய்தது. விலாசம்: ஜெனரல் சப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், சென்னை. விலை அணா 8.

(6) திருக்குறள் வசனம்:—தஞ்சாவூர்ஜில்லா, திருமுல்லைவாயில் சப்போஸ்ட் மாஸ்டர், பு. து. இரத்தினம் பிள்ளையவர்கள். விலை ரூ 1.

என்பனவைகளே. இவற்றை அனுப்பியவர்கட்கு பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேம்.

பத்திராசிரியர்.